# அமிர்தவசனி


தெய்வீக மாதப் பத்திரிகை


| | | |
|---|---|---|
| மலர்: 9<br>இதழ்: 4<br>விலை 25 ந. பை | ஹேவிளம்பி ௵ ஆடி ௴<br>ஜூலை — ஆகஸ்ட் '57 | [illegible]<br>ரூ. 2-[illegible] |



-Page -157-

ACC. NO. 18582

தமது திருமணத்தில் கலந்து கொண்டவருடன்
திருஞான சம்பந்தர், துணைவியொடு
திருவருள் ஜோதியிற் கலத்தல்

பெரியபுராணச் சித்திர விளக்கம் 40 பக்கம் 186

# பொருளடக்கம்

—158 —


| | | பக்கம் |
|---|---|---|
| 1. அகஸ்தியர் முருகன் | (திருப்புகழ் மணி) ... | 145 |
| 2. கதிர்காமத் திருப்புகழ் விரிவுரை | (குகஸ்ரீ) ... | 148 |
| 3. இன்ப மாகடல் (கோவை. கவியரசு கு. நடேச கவுண்டர்) | ... | 153 |
| 4. கீதை காட்டும் பாதை | (அ. ராமமூர்த்தி) ... | 157 |
| 5. ஆசிய நாகரிகம் (தென்னுப்பிரிக்கா டர்பன் திரு. ச. மு. பிள்ளை) | ... | 160 |
| 6. பண்பாம் பயன் | (சிவானந்த விஜயலக்ஷ்மி) ... | 163 |
| 7. ஆறுபடை வீடுகளின் தத்துவ அமைதி திருப்புகழ் சதுரர் சே.த. ராமலிங்கம் பிள்ளை B.A.B.T.) | ... | 170 |
| 8. மங்கள கருணைகரர் | (ரஸபதி) ... | 176 |
| 9. திருஞானசம்பந்தர் திருமணம் (சேக்கிழார் அடியன்) | ... | 186 |
| 10. 'Ananda' | *(Thiruppugal Mani)* ... | 191 |


## அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ° முதல் பங்குனி மீ° முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 (2-25) முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 10—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினுல் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினுல், சித்திரைமீ° முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தாத் தொகையை பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு: முக்கிய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3—6—0 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ.1.

அமிர்தவசனி
தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர் சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

| மலர் 9 | ஹேவிளம்பி ஞூ ஆடி மீ<br>ஜுலை - ஆகஸ்டு—57 | இதழ் 4 |
| --- | --- | --- |

# அகஸ்தியர் முருகன் - 2

(திருப்புகழ் மணி)

அகஸ்தியர் மாலை நேரத்தில் வழிபாடுகளை முடித்துக் கொண்டு நதிக் கரையில் நின்று தனது ஆச்ரமத்திற்கு திரும்புகிறார். அஸ்தமன சமயம். 'ஷண்முக ஷண்முக ஓம்' என்ற திவ்ய மந்திரத்தை ஒலித்துக் கொண்டே வருகின்றார். அடர்ந்த மலர்ச் சோலையில் புகுந்து செல்வதற்கு நுழைந்தார். கொஞ்ச தூரம் சென்ற பின்பு தேமதுரத் தமிழில் கனிந்த ஓர் குரல் கேட்டதும், சுற்றிப் பார்த்து இந்தக் குரல் யாருடைய குரலாயிருக்குமென்று யோசித்து சற்று நின்றார். உல்லாசமாக தென்றல் வீசிக் கொண்டே இருந்ததாம். அப்பொழுது ஒரு பாலன் அச்சோலையில் நின்றும் வெளி வந்தானும். அகஸ்தியர் திகைத்து நின்றார்.

அகஸ்தியரைப் பார்த்து பாலன் சொன்னதாவது:- "அகஸ்தியரே! என் நாமம் முருகன். என்னை நாடுகின்ற அன்பர்களுடைய மனம் எனது ஊர். அவர்களுக்கு என்னை நாதன் என்றும் சொல்வார்கள்."

ஆதியந்தம் இல்லாதான் அருவுருவும் தான்கடந்தான்
தீதிலனுய் வாழஎனைத் தெளிவுறுத்தல் என்றேயோ.

அகஸ்தியர் முருகன் அழகைப் பார்த்தார். மன்மதனுடைய கர்வத்தைப் பரமசிவன் நெற்றிக் கண்ணில் பிறந்த ஒரு பொறியினு லல்லவோ அழித்தார் ஆ! ஆ! இந்த பாலன் தன்னுடைய அழகினுலேயே காமன் கர்வத்தை அடக்கி விட்டான் போலும். இவன் தவக் கொழுந்தோ? சிவக்கொழுந்தோ? கற்பகத்தின் செங் கனியோ? என்றெல்லாம் தோற்றங்கள் எழ, பாலனைப் பார்த்த பார்வையால் த்யானத்தில் நின்று விட்டாராம். அப்போது முருகன் அகஸ்தியரைப் பார்த்து உபதேசித்தது ஒன்று உண்டாம்.

''என்னை அழைத்துவிட்டால்—அவர்க்கென
என்னையும் தந்திடுவேன்
இன்னலெல்லாம் தவிர்ப்பேன்—எப்போதும் மெய்
இன்பம் பொழிந்திடுவேன்.''

அழைக்கும் வழி என்னவோ? யான் எனது இவ்விரண்டையும் வேருக்கி, யாவும் எவையும் தனது எனும் தன்மையை முன்கூட்டி, சிந்தா ரத்னமாகிய ஸிம்மாசனத்தில் வந்துறைய வேண்டுவதுதான் அழைப்பு.

''உன்னிதயத்தி லெழும்—தமிழ்க் கவி
உட்கொள்ள ஓடிவந்தேன்
பன்னற்கரும் புகழாய்—பரிந்தினிப்
பண்புடன் பாடுகென்முன்.''

அகஸ்தியர் இவ்விதம் அனுக்ரஹிக்கப்பட்டு, பாடிய செந்தமிழ்ப் பாவினிலே முருகன் பொருட்கோலமாய் உறைகின்றுன் என்ருர் அருணகிரி. இந்த அனுபவத்தை நொச்சூர் சிவயோகி சித்தானந்தா, 'இதய வீணை' என்ற பாடல்களிலே சித்திரித்து விட்டார்.

அகஸ்தியர் அடைந்த பேரானந்தத்தை கீழ்க் கண்ட பாட்டின் மூலமாக ஒருவாறு அறியலாம்.

---

விளக்கொளிசெய் துள்ளத்தில் விளங்கென்னைக் காணென்னும்
களக்கமிலாத் தெய்வமென் கண்திறப்ப தென்றேயோ

"எத்தனை புண்ணியமோ—பெருத்தவம்
எம்மையிற் செய்ததுவோ
அத்தனைக் கண்டு கொண்டேன்—இவ்வேழையை
ஆட்கொள்ள வந்தனனே.
சத்தம் அடங்கியது—ஷடாக்ஷரத்
தன்மை விளங்கியது
பெத்தப் பிணிப்பகல—பக்தி என்னும்
பித்துப் பிடித்ததுவே."

அருணகிரியார் கந்தரலங்காரத்தில் உபதேசிக்கின்றார்.

"நீலச் சிகண்டியி லேறும்பிரான் எந்த நேரத்திலும்
கோலக் குறத்தியுடன் வருவான்—குரு நாதன் சொன்ன
சீலத்தை மெல்லத் தெளிந்தறிவார் சிவயோகிகளே
காலத்தை வென்றிருப்பார்.........."

அன்யோன்ய ஒற்றுமையில் உபதேசங்கள் எப்படி ஒன்றுபடுகின்றன என்ற மகிழ்ச்சி எழும்புகின்றது. முருகனை வா! வா! என்று அழைக்க வேண்டும். இன்னல்களைத் தவிர்த்திட அதுவே நல்ல உபாயம். இது தான் பக்தி நெறி என்பது விளங்கும். அகஸ்தியர் ஒரு வாக்கியத்தில் சொல்லுகின்றார். "ஷண்முக நாயகன் தோன்றிடுவான் சத்குரு நாயகன் தோன்றிடுவான்-அவனைப் போற்றிடலாம்-கண்களினால் கண்டு போற்றிடலாம்-கொடும் காலத்தையும் காலனையும் மாற்றிடலாம்." ஆகவே, பக்தியினால் முருகனை வா! வா! என்று அழைப்பதே வினைகளை மாற்றும் வழி. வேளைக்காரன் வகுப்பில் இதை முக்தி என்று கூறினார் அருணகிரியார். முருகன் தோன்றுமிடங்களை அடுத்த இதழில் கூறுவோமாக.

---

வெள்ளி மலையானை மெய்ய் வெள்ளை விடையுடையான்
கன்னமகல் ஆன்மவிடை மேலிருப்பக் காணேனே

உ

# கதிர்காமத் திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

*உடுக்கத் துகில்வேணும், நீள்பசி*
*அவிக்கக் கனபானம் வேணும், நல்*
*ஒளிக்குப் புனலாடை வேணும்,மெய் யுறுநோயை*
*ஒழிக்கப் பரிகாரம் வேணும், உள்*
*இருக்கச் சிறுநாரி வேணும்,ஓர்*
*படுக்கத் தனிவீடு வேணும்,இவ் வகையாவும்*
*கிடைக்க குருஹவாசி யாகிய*
*மயக்கக் கடலாடி நீடிய*
*கிளைக்குப் பரிபால னாய்,உயிர் அவமேபோம்;*
*க்ருபைச்சித் தமும்,ஞான போதமும்*
*அழைத்துத் தரவேணும், ஊழ்பவ*
*கிரிக்குள் சுழல்வேனை ஆளுவ(து) ஒருநாளே;*
*குடக்குச் சிலதூதர் தேடுக*
*வடக்குச் சிலதூதர் நாடுக*
*குணக்குச் சிலதூதர் தேடுக எனமேவி*
*குறிப்பிற் குறிகாணும் மாருதி*
*இனித்தெற் கொருதூது போவது*
*குறிப்பிற் குறிபோன போதிலும் வரலாமோ;*
*அடிக்குத் திரகாரர் ஆகிய*
*அரக்கர்க் கிளையாத தீரனும்*
*அலைக்கப் புறமேவி மாதுறு வனமேசென்(று)*
*அருள்பொன் திருவாழி மோதிரம்*
*அளித்துற் றவர்மேல் மனோகரம்*
*அளித்துக் கதிர்காமம் மேவிய பெருமாளே!*

*(குடக்குமுதல்...வரலாமோ வரை)*

(பதவுரை.) குடக்கு சில தூதர் தேடுக-மேற்குத் திசையில் சில தூதர்கள், (சென்று சீதையைத்) தேடுவார்களாக;

---

**வெள்ளச் சடைமுடிமேல் வெண்மதியம் வைத்தபிரான்**
**அள்ளியெனைத் தன்னருளில் ஆர்த்துவதும் என்றேயோ**

வடக்கு சில தூதர் நாடுக - வடக்குத் திக்கில் சில தூதுவர்கள் (சென்று) ஆய்வார்களாக;

குணக்கு சில தூதர்கள் தேடுக - கிழக்கில் சில தூதுவர்கள் (படர்ந்து) துருவிப் பார்ப்பார்களாக (என்று கட்டளையிட்டு);

குறிப்பில் குறி காணும் மாருதி - (முகக்) குறிப்பால் (பிறர் அகக்) குறிப்பை அறியும் வாயு புத்திரனை அனுமான்; இனி தெற்கு ஒரு தூது போவது என - இனி தென் திசையில் ஒப்பற்ற ஒற்றனைச் செல்லக் கடவன் என்று அருளியபடி; மேவி குறிப்பில் குறி போன போதிலும் - விரும்பி இலட்சிய நாட்டம் உடைய அநுமான் சென்றிலும்;

வரல் ஆமோ - (உயிரோடு திரும்பி) வருவது இயலுமா?

(அடிக்கு...இளையாத...தீரன்...- பெருமாளே என்பதுவரை)

அடிக்கு திரகாரர் ஆகிய - (எவரையும் சாக) அடிக்கும் கொடுமைக்கு உரிய உறுதி உடம்பினர் ஆன; அரக்கர்க்கு இளையாத தீரனும் - இராட்சசர்கட்குச் சளைக்காத அமராடிய தீரனை அந்த ஆஞ்சநேயனும்;

அலைக்குக்கு அப்புறம் மேவி - அலைகளை யுடைய கடலைக் கடந்து சென்று; மாது உறு வனமே சென்று - சீதை (சிறை) யிருக்கும் (அசோக) வனத்தைச் சேர்ந்து;

அருள் பொன் திரு ஆழி மோதிரம் அளித்து உற்றவர் மேல் - அருளை யுடைய பொன்னால் ஆன சிறந்த வட்ட வடிவக் கணையாழியை (பிராட்டியிடம்) தந்து மீண்ட அம் மாருதிமேல்;

மனோகரம் அளித்து - மனதிற்கு ரம்யம் தோன்ற ஆவேசித்து (வென்றி தந்து);

கதிர்காமம் மேவிய பெருமாளே - (ஒன்றும் அறியாதவன் போல்) கதிர்காமத்தில் விரும்பி எழுந்தருளிய பெருமையிற் சிறந்த பெருமானே!

(உடுக்க...அவமே போம் என்பதுவரை.)

உடுக்கத் துகில் வேணும் - (இடையில்) உடுத்துக் கொள்ளச் (சிறந்த) உடை வேண்டும்;

நீள் பசி அவிக்க - பெரும் பசியைத் தணிக்க; கன பானம் வேணும் - உயர்ந்த ரஸமான உணவு வேண்டும்;

நல் ஒளிக்கு புனல் ஆடை வேணும் - சிறந்த பளபளப்பிற்கு அருமை நீர்மையான (மேல்) ஆடை வேண்டும்;

---

இன்பஅருள் முகிலாய் என்மேல் மழைபெய்து
துன்பபவ வெம்மை தொலைப்பதுவும் என்றேயோ

. மெய் உறு நோயை ஒழிக்க பரிகாரம் வேணும் – உடலில் வரும் பிணிகளை (ஒரு நொடியில் தீர்க்க உபாய) ஆதரங்கள் வேண்டும்;

உள் இருக்க சிறு நாரி வேணும் - வீட்டுள (இல்லியாக) இருக்க, இளம்பருவ ஏந்திழை ஒருத்தி வேண்டும்;

படுக்க ஓர் தனி வீடு வேண்டும் - (அவளுடன் எப்போதும்) சயனிக்க (யாருமற்ற) ஒரு தனி வீடு இருக்க வேண்டும் (என்று, இடையறாது முயன்று);

இவ் வகை யாவும் கிடைத்து - வகையான இவை யனைத்தும் எய்தி;

கிருஹ வாசி யாகிய மயக்கக் கடல் ஆடி - மாளிகையில் வசித்து, (போலி இல்லறமான) அந்த மோக சாகரத்துள் மூழ்கி;

நீடிய கிளைக்குப் பரிபாலனும் - பெருகி வருகிற (மக்கள், பேரர், பேர்த்தியர் முதலிய) சுறறத்தினர்க்கு உரிய சூழ்நிலை தேடும் காப்பாளனுகி;

உயிர் அவமே போம் – (இந்த) உயிர் பயனகன்று (உடல கன்று) ஒழிந்து போகுமே; (அப்படி ஆகாதபடி);

க்ருபை சித்தமும் - அருள் உணாவும்; ஞான போதமும் - ஞானத தெளிவும், அழைத்து - (கீழ்மையனுக்கு இரங்கி, வலிந்து திருவுளத்தில்) வருவித்து; தரவேணும் - (அடிமைக்கு) அருளல் வேண்டும்;

ஊழ் பவ கிரிக்குள் சுழல்வேனை - ஊழ எனும் வினையால், பிறவிப் பெருமலைக் குகைக்குள் அகப்பட்டு அலைமோதும் அடியேனை; ஆளுவது ஒரு நாளே - (நின்) அடிமையாக்கிக் கொள்ளும் ஒரு நாள் என்று நேருமோ? (எ-று).

## விளக்கம்

காதக பாதக சாதக இராவணன், பிராட்டியை இராமனிடமிருந்து பிரித்தான்; செம்மையற்ற இலங்கையில் சிறையும் வைத்தான். இது கண்டு, தேம்பி யழுதது தரும தேவதை.

தேவியைப் பிரிந்து திகைத்த ரகுபதி, மயிலே! குயிலே! மான் இனங்காள்! எங்கே என் தேவி? எங்கே என் மைதிலி? எங்கே? எங்கே என்று, எதிர்ப்பட்டவற்றை யெல்லாம் நோக்கி, குமுறி யழுது கூவினன்,

---

தன்பெருமை தானறியான் சந்நிதியில் சார்ந்தடியேன்
என்பெருமை தோன்று திருப்பதுவும் என்றேயோ

கோபமும் துன்பமும் மிகுந்து கொதித்து, பொரிந்து கரிந்தது இலக்குவன் மேனி.

இருவரும் பல இடங்களை நாடினர், உயிர்போம் நிலையில், சடாயு சமிக்ஞை காட்டினர். சவரி வழி காட்டினள, அவ்வழியே சென்ற அருள்மிகு ரகுபதி,தூய சுக்ரீவனை த துணை கொண்டான். அவன் மூலம், சானகி யிருக்குமிடம் கண்டு வர, வானரப் படை கள் வாய்ந்தன.

சிலர்க்கு வடக்கில் செல்லக் கட்டளை. சிலர்க்கு மேற்கில் செல்ல உததரவு. சிலர்க்குக் கிழக்கில் செல்ல ஆக்ஞை.

அருந்திறல், பெருந்தகுதி, கலைஞானம், நுண்மை மதி, குறிப் பறிதவில சிறந்த குணக் கொண்டலான அனுமானை, அன்பொடு இராமன் தனிதது அழைததான்.

ஆஞ்சநேயா! நீ தென் திசை செல! தேவியைக் காண்பை யேல், என் தூதன் என்பதற்கு அடையாளமாக இதைக் கொடு என்று, கைக் கணையாழியைக் கழற்றி யளித்தான்.

அருளாணை மேற்கொண்ட அனுமான், கந்தனை இதயத்தில் வந்தித்து, கடலைத் தாவினன். இலங்கையில் குதித்தான். தேவியை எங்கும் தேடினன். அன்னை எங்கும் அகப்படாமையால், துறப் பேன உயிரென்று துணிந்தான்.

கவலும் அவன் மனநிலை கண்ட கதிர்காமன், அருளொடு அவனில் ஆவேசிததான். பெரும் தெளிவு அதனால் பிறந்தது. மேலும் தேடினுன். தேடிக் கொண்டே சென்றுன்; காகுத்தன் தேவியை, அசோக வனததில் கண்டான். வந்த சோதனைகளால் நொந்த மனத தேவி, மூர்ததண்யமாகி, உயிர் துறக்க முயன்றுள்.

கண்டனன் அனுமன், கருததும் எண்ணினன்; கொண்டனன் நடுக்கம். மெய் தீண்டக் கூசினன். அண்டர் நாயகன் அருள தூதன் யான் என்று அறிவித்தபடி, கப்பும் கிளையுமான மரத்தில் இருந்து குதித்தான்.

மகிழ்ந்தது மனம், மேலும், யாரோ இவன்? என்று, இதயம் ஐயம் கொண்டது. அதையறிந்து, விறு விறு என்று இராகவன் செய்தியை விளம்பினன் மாருதி.

தாயே! தாங்கள் இருக்கும் இடம் அறிய, எண்ணிறந்த வானரர்கள், திசையனைத்தும் சென்றுளர். தங்களைத் தரிசிக்கும் தவமுள்ள அடியேன்; இதோ அம்மா! ரகுபதியின் கணையாழி என்று, கண்டு மகிழக் கையில கொடுத்தான்.

---

மண்முதலா வாக்காதி மனம்கடந்த மாதவனை
எண்ணுமல் எண்ணி யிருப்பதுவும் என்றேயோ

ஆர்வம் பெருகிய அன்னை, அனுமா! நீ இன்று போல் என்றும் இரு என்று ஆசிகூறினள்.

ஒரு மாதத்தில் சிறை யகலும் என்ற உறுதி கூறி, திரும்பி னன் அந்தச் சிறிய திருவடி. அநியாய இராவணன் மேல் இருந்த ஆத்திரத்தால், அங்கிருந்த அசோக வனத்தை அழித்தான்.

உயிர்போகும்வரை, அடி அடி என்று அடிக்க அறிந்தவர், இரக்கம்அற்ற அரக்கர்கள். இராவணன் மகன் அட்சயன் அவன் எதிர்ப்பட்டாரை இடிப்பான்; அவர் என்பை உடைப்பான். குடைந்து உடலைக் குழம்பாக்குவான். அந்த அட்சயன், அரக் கரோடு வந்து எதிர்த்தான்.

கதிர்காமன் தன்னில் ஆவேசித்திருக்கும் ஆற்றலால, உறுத்து எதிர்த்தவர் உயிரை ஒழித்தா மாருதி. அதன்பின், இந்திர ஜித்து வந்து எதிர்த்தான். கருதிய பல சிந்தனையால், வேண்டுமென்றே கட்டுப்பட்ட அநுமனை, இராவணன் எதிரில் நிறுத்தினா. அறவுரை பல கூறினன் அனுமான். இறுமாந்திருக்கும் இராவணன் தன் இருபது செவிகளும், அந்த உபதேசத்தை ஏறக மறுத்தன. இவன் வாலில், தீ வைப்பின்கள என்று பத்துவாயாலும் கூவினன். வாலில் வைத்த தீயால் இலங்கையைக் கொளுத்தி, வந்த வழியே அனுமான் மீண்டான். இராகவனைத் தரிசித்தான். சானகி ஆக்கம் கூறி சாந்தி தந்தான். அதன்பின் அரக்கரைக் கருவறுத்து, அறவோர்க் குக் காப்பளித்து, விடுதலை பெற்ற சனகியுடன் அயோத்தியை ஆண்டு, எவர்க்கும் இன்பம் செய்தான் இராமன் என்பது பழைய வரலாறு.

மாருதியின் தொண்டு, தன்னலம் அற்றது. அது கண்டு, அவனில் கலந்திருந்து, வெற்றியை யளித்தது வேல் தெய்வம். இவ்வரலாறு, முருக பக்தர்கட்கு ஒரு முன்னறிவிப்பு.

பற்று ஒன்றும் இல்லாத பக்தர் ஆஞ்சநேயா, அங்கிலேயில், உத்தமத் தொண்டு செய்து உயர்ந்தார். கதிர்காமா! அவர்க்கு நீ அருள் பாலித்தாய் என்பதில், என்ன அதிசயம் இருக்கிறது?

என் சரித்திரம் பரிதாபம். இடைக்கு உடை, மேலாடை, பசிக்கு உணவு, சிறந்ததாகப் பலிக்க வேண்டும்! உடல் நோய் வந்தால், அது ஒருநொடியில் ஒழிய வேண்டும்! இது என் நினைவு. மேலும், மோக விகாரம் ஒருபுறம் முதிர்கிறது. கனந் தங்கிய மேலோர் காரித துப்பும் கடைப்பட்ட வாழ்வுடைய எனக்கு, இல்லறத்தான் என்று ஒரு போலிப் பெயரும் இருக்கிறது.

---

ஆசா விகாரமற அம்மையப்பா என்றலறிப்
பேசாது பேசிப் பெரிதுவத்தல் என்றேயோ

எம்பெருமானே! உன் திருவுளத்தில் இரக்கம் தோன்றி, அடியேனுக்கு ஞானம் அருளாயா! தெளிவு பிறக்கச் சங்கற்பம் செய்யாயா! முறையே பிறவியெனும் மலைக்குகையுள் சிக்கி, வெளிப்பட அறியாமல், அங்கேயே சுழன்று வருந்தும் அடியேனை, நீ ஆளாக்கிக்கொள்ளும் நாள் என்றேயோ? என்று பிரார்த்திக்கும் இனிய திருப்புகழ் இது!

அநுமனை, 'சொல்லின் செல்வன்' என்றான் இராமன். 'மெய்ம் மையின் வேலி போல்வான்'; 'தருமத்தின் தனிமை தீர்ப்பான்' என்பது கம்பர் வைத்த பெயர்.

'குறிப்பிற் குறி காணும் மாருதி' என்று ஒரு அரும்பெயர் சூட்டுகின்றார் நம் அருணகிரி நாதர்.

இதயத்தில் குகப்பரமன் இருக்கும் குறிப்பை, உணர்ந்தவன் அனுமான் என்ற பொருளும் இதற்கு உண்டு. சுநதா முருகனை, என்றும் எண்ணும் அதனால், மாருதிக்குச் சுநதான் என்றொரு பெயர் உண்டு.

"குறிப்புள் குறிப்புணர் வாரை, உறுப்பினுள்
யாதும் கொடுத்துக் கொளல்"

என்ற வள்ளுவர் பெருமான், உடல் உறுப்பை உதவியேனும், வாழும் அவரை வயப்படுத்துக என்றார்.

எம்பெருமான் கதிர்காமனே, தன்னையே அனுமனுக்குத் தந்து, அவனைத் தக்கோன் ஆக்கினான் என்பது, இத் திருப்புகழில் கண்ட திறம்.

வாழ்க திருப்புகழ்.

---

# இன்ப மாகடல்

[கோவை. கவியரசு. கு. நடேச கவுண்டர்]

முழுமுதற் பரம்பொருளின் திருவருள் வெள்ளத்தில் திளைத்த பெருந்தவச் செல்வர்கள், அதனைப் பேரின்பக் கடலாகப் புகழ்ந்து கூறியுள்ளனர். பரம்பொருளினை அன்னையாகவும், ஐயனாகவும், குமரனாகவும், குருநாதனாக வும் தத்தம் விருப்பிற்கேற்ப வெவ்வேறு வகையில் வழி பட்டு அநுபூதிபெற்ற பெரியோர்கள், சில பல வகைகளில் கருத்து மாறுபாடு உடையரெனினும், பரம்பொருள்

---

பகலிரவு தோன்றாமல் பற்றனைத்தும் மாய்ந்துன்னை
அகம்புறமு மேதமுவும் ஆநந்தம் என்றேயோ

ஒன்றேதான் என்பதினும் அது இன்பமயமானது என்பதினும் எள்ளளவும் மாறுபாடு கொண்டிலர்.

"பேரா ஒழியாப் பிரிவில்லா மறவா நினையா அளவிலா
மாளா இன்ப மாகடலே"

என்றூர் மாணிக்கவாசகர்.

கடல்களிலே வங்காளக்குடாக் கடல் அரபிக் கடல் போலச் சிறியனவும் உள, அட்லாண்டிக் கடல் பசிபிக் கடல் போலப் பெரியனவுமுள; தாம் நினைத்த கடல் அவையனைத்திலும் பெரிய கடல் என்பாராய் 'மாகடல்' என்றூர். மாகடல்கள் ஏழுளவென்பர் புராண நூலோர். அவையெல்லாம் தனித் தனியாகவேனும் ஒருங்கு கூடியேனும் இக் கடலுக்கு இணையாகா என்பாராய் இந்த மாகடலுக்குப், 'பேரா' முதலாக 'மாளா' ஈருக ஏழு அடைமொழிகள் புணர்த்தார். அவ்வெழுகடல்கள் ஒவ்வொன்றும் உப்பு நீர், சுத்தநீர் முதலாக வெவ்வேறு ஆதேயங்களை யுடையதாகும். இந்த மாகடலோவெனின் இன்பமே நிறைந்தது ஆதலால் 'இன்ப மாகடல்' என்றூர்.

கந்தரநுபூதிக் கடல் முகந்து சந்தக் கவியின்ப மழை பொழிந்த கருணை முகிலாகிய அருணகிரிநாதர்,

"பத்திகதிருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்திக்திருக்கும் அமுது கண்டேன் செயல மாண்டொடுக்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித் [கப்
தத்திக் கரைபுரளும் பரமானந்த சாகரத்தே"

எனத் தம் இறைவனைப் பரமானந்த சாகரத்தில் தோன்றும் அமுதமாக அருளிச் செய்தார்.

"கொள்ள மாளா இன்பவெள்ளம்" என்றூர் குருகூரார்.

"கடவுள் அழியாத இன்பக் கடல்" என்றூர் இராம கிருஷ்ண பரமஹம்ஸர்.

"பக்தி ஞானங்களால் உண்டாகும் ஈசுவரா நுக்கிரகமே பரமாநந்த சுகத்தைக் கொடுக்க வல்லது" என்னும் சிவமஹா புராணம்.

சமணர்களால் நீற்றறையில் வீற்றிருந்த திருநாவுக்கரசரது நிலையைச் சேக்கிழார் பெருமான் செப்புங்கால்,

---

புகழமுத நற்கடலே பூரணனே ஏழை
இகவுலகம் காணுத இன்பமுறல் என்றேயோ

"ஆனந்த வெள்ளத்தினிடை அழுந்தி அம்பலவர்
தேனுந்து மலர்ப்பாதத் தமுதுண்டு தெளிவெய்தி
ஊனந்தான் இலராகி உவந்திருந்தார்"

என அருளிச் செய்துள்ளார்.

இத் திருப்பாட்டில் சிவத் தியானத்தால் எழும் இன்பத்தை ஆனந்த வெள்ளமாக-இனபமா கடலாகவும், அதன் முதிர்ச்சியாகி எழும் இரண்டற்ற சிவாநுபவ நிலையை அமுதமாகவும் அருளிச்செய்துள்ளமை நோக்கினுல், எமக்கும் ஆனந்தம் பொங்குகிறது. அதன்மேல் மற்றோர் தனிச் சுவையும் இத் திருப்பாட்டில் காண்போம். ஏனைய மலர்கள் உந்திய தேனை, அமுதை உண்டார்க்கு மயக்கம் உண்டாவது இயல்பு. ஆனுல் அம்பலவரது தேனுந்து மலர்ப் பாதத்தமுது உண்ட எங்கள் அப்பர் தெளிவெய்தி இருந்தார் என்றருளியது நம் மருளை நீக்குகின்றதன்றோ!

தேவி பக்தர்களில் சிறந்தவராகிய மஹாகவி நீலகண்ட தீக்ஷிதர் மீனுட்சியம்மையின் திருவுருவ தியானத்தால் எழும் இன்பப் பெருக்கை ஆனந்தசாகரம்=இன்பமா கடல் என்று ஒரு சுலோகத்திற் பாராட்டியுள்ளார். அதன் மொழிபெயர்ப்பு வருமாறு:—

"மணிமுடியே முதலாக மலரடியே ஈறாக மாதா உன்றன்
அணியுருவின் அங்கங்கள் புவன மங்கள மாகி யவற்றைச் [சிந்தை
எணிஎழும் இன்பக் கடலின் அலை யூசலாடி மகிழ்ந் திமைப் [போதாகத
திணியுலகில் நாட்கழிவு தெரியாமல் வாழ்கின்றேன் திகழ்சேற் கன்னி"

(ஆனந்த சாகரஸ்தவம் 53.)

வழிபடு கடவுளின் திருவுருவத்தைத் தியானிக்கும் முறை இருவகைப்படும், பாதாதி கேசாந்தம் எனவும் கேசாதி பாதாந்தம் எனவும். மணிமுடி முதல் மலரடி ஈறுகத் தியானிப்பது கேசாதி பாதாந்தத் தியானமாகும். இச் செய்யுளிற் கூறப்பட்டது சேற்கன்னி (மீனுட்சியம்மை) யின் திருவுருவம். அவள் எல்லா உலகங்களையும் (புவனங்களையும் உயிர்களையும்) ஈன்றுள் ஆதலால் 'மாதா' ஆகுவள். திருமகள் முதலாகவுள்ள எல்லாப் பெண்டிரின் அழகும்

---

மண்ணிலுளை விண்ணிலுளை மற்றெங்கும் தோய்ந்துளை நீ
எண்ணிலுளை யென்பரதை யானறிதல் .என்றேயோ

அம்மையின் அழகு வெள்ளத்தின் சிறு துளியே யாகும். ஆதலால் அவள் உரு 'அணியுரு' எனப்பட்டது. அழகே கொண்ட உருவம் என்பது கருத்து. அங்கங்கள் = உறுப்புக்கள். "தோள் கண்டார் தோளே கண்டார்" என்பது போல அம்மையின் திருவங்கங்களின் ஒன்றின் தியானத்திலே உள்ளம் ஒன்றிவிடுவர் உண்மையன்பர். அந்த ஓரங்கத் தியானமே அன்பர் உள்ளிய பேறனைத்தும் உதவ வல்லது. ஆகையால் அவள் அங்கங்கள் "புவன மங்கமாகியவை." அவற்றை எண்ணுந்தோறும் உள்ளத்தில் இன்பக்கடல் பொங்கும். அதிலே உள்ளம் ஊசலாடி மகிழும். கேசம் முதலாகப் பாதத்திற்கும் பாதம்முதலாகக் கேசத்திற்கும் சிந்தை செல்வதே ஊசலாடல் ஆகும். அவ்வாறு தியானத்தில் திளைப்போர்க்கு ஊழியும் நாழிகை போல் கழியும்; ஆதலால் "நாட் கழிவு தெரியாமல்" எனப்பட்டது. இங்ஙனம் தியானத்தால் இன்புறுவதினும் இனிய பேறு எதுவும் எங்கும் இல்லை யாதலால், "ஊனடைந்த உடம்பின் பிறவியே தான் அடைந்த உறுதியைச் சார்ந்தது" ஆகி 'வாழ்கின்றேன்' என்று கூறினர்.

இதுவரை கூறியவாற்றால் கடவுள் இன்பமயமானது என்பதும், கடவுளை அன்பர்கள் தத்தம் சுவை, அறிவு, ஆற்றல் முதலியவைகட் கேற்ப அருவாகவும் உருவாகவும், ஆணாகவும் பெண்ணாகவும் பிறவாகவும் வழிபடுவர் என்பதும், திருவுருவத் தியானம் பேரின்பம் பயப்பது என்பதும், அதுவே நீ வேறு நான் வேறு என்னாது நேராக வாழும் நிலையையும் தரும் என்பதும் பெறப்படும்.

இனி, கொள்ளமாளா இன்ப வெள்ளத்திற் குளிக்க விரும்புவாரை நோக்கி வாதவூர் வள்ளலார் ஆற்றுப்படுத்தும் பாட்டு ஒன்று காட்டி நிறுத்துதும்.

"நீர் இன்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற நெஞ்சம்
[கொண்டீர்]
பார் இன்ப வெள்ளம் கொளப் பரிமேல் வந்த பாண்டியனார்,
ஓர் இன்ப வெள்ளத்து உருக்கொண்டு தொண்டரை உள்ளம்
[கொண்டார்,
பேரின்ப வெள்ளத்துட் பெய்கழலே சென்று பேணுமினே"
(திருவாசகம்)

---

சாரும் பொருள்கடமை சத்துவம்செய் கின்றுயாம்
ஓருமெற்குச் சாந்தி உதவுவதும் என்றேயோ

இதன் பொருள்:— இன்ப வெள்ளத்திலே (இன்ப மாகடலிலே) நீந்திக் குளிக்க வேண்டும் என்று விருப்பம் கொண்டவர்களே! நீவிர் சென்று பத்தி செய்ம்மின். எதனை? - நீவிர் விரும்பியவாறு பேரின்ப வெள்ளத்துள் உம்மை அழுத்தும் திருவடிகளை. யாருடைய திருவடிகளை?- இந்த உலகத்தை இன்பவெள்ளம் வந்து மூடும்படி குதிரை மேல் வந்தருளிய (சோமசுந்தர)பாண்டியனது திருவடிகளை; அவனது திருவடி பத்தி செய்தால் இன்பம் மூழ்கலாவது எங்ஙனம்? - அவன் ஒப்பற்ற இன்பமே உருவமாகவுடையவன். அவன் குதிரையேறி வந்தபோது இன்பவெள்ளம் எய்தாதார் இலரோ? - எய்தாதாரும் இருந்தனர். அவர் யாரெனின், இன்பம் எய்தவேண்டும் என்ற எண்ணமும் அறிவும் ஆற்றலும் இல்லாத மிண்டர்; அவரல்லாத தொண்டரது உள்ளத்தை யெல்லாம் அக் குதிரை வீரன் கொள்ளைகொண்டு இன்ப வெள்ளம் அருளினன் - என்றவாறு.

---

<u>கட்டுரை-4</u>

# கீதை காட்டும் பாதை

(அ. ராமமூர்த்தி)

**இரக்கமும் பேராசையும்:**

பாரதப் போருக்கு மூல காரணம் துரியோதனாதியர்களுடைய பேராசை தான். சாதாரணமாக ஒரு தனி மனிதக் கூட்டத்தினுடைய பேராசை எவ்வளவு பெரிய ஜன சமூகத்தை அழிப்பதற்கு ஆணி வேராயுள்ளது! அது மட்டுமா? அதர்மத்திற்கும் குலநாசத்திற்கும் காரணமாயிருக்கிறது. ஆசைகள் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடையவை. குறிப்பிட்ட ஒரு ஆசை தான் ஒரு மனிதனுக்கு அதிகமாயுள்ளது என்று கூறுவதில் அர்த்தமேயில்லை. மண்ணாசை யுள்ளவனுக்குப் பெண்ணாசையும் பொன்னாசையும் கூட இருந்தே தீரும்! தீவினைகளுக்கு மூல

---

அணுவுள் அணுவாகி அண்டங்கட் கப்பாலாம்
கணுமுற்று கரும்புன்னைக் கண்டுகலப் பென்றேயோ

காரணம் ஆசை தான். ஆசை அகலாத வரையில் துக்கம் அழிவதில்லை. பேராசை பெருந்துக்கமாகி விடுகிறது. எந்த சமயத்திலும் ஆசையினால் இன்பம் கிடைப்பதில்லை. ஆசை யற்ற நிலையில்தான் சுகானுபவம் கிடைக்கிறது. ஆனால் மனி தன் தன்னை உயர்த்திக் கொள்வதற்கும் இந்த ஆசையின் உதவி வேண்டும்! ஆசையை மடை மாற்றித் திருப்பிக் கொள்ள வேண்டும். சிறந்த சிந்தனையாளனுக்கு இது அசாத்தியமான காரியமல்ல. ஆசையை மேலான விஷயங் களில் திருப்பிச் செலுத்துவது என்பது தான் நிராசை (ஆசை ஒழிப்பு.)

பரத்தில் ஆசை வைப்பது இகத்தில் உள்ள ஆசை யின் திருப்பமேயாகும். இன்னும் ஆழ்ந்து சிந்தித்தோ மானால் உண்மையில் எந்த ஒன்றும் அழிவதே யில்லை. மாறுதல் தான் பெறுகிறது. ஆசையின் மேன்மையான மாறுதலே நிராசை. ஆசையின் அழிவல்ல. நெய், மோர், தயிர் இவை யெல்லாம் பாலின் உருமாற்றமே யன்றோ? உருமாற் றமும் பெயர் மாற்றமும் மூல வஸ்துவை மறக்கும்படி செய்து விடுகின்றன!

துரியோதனாதியர்களுடைய பேராசையில் மண்ணாசை மட்டும் பிரதான்யம் வகிக்கவில்லை. எல்லா ஆசைகளின் தொகுப்பும் அவர்களிடம் இருந்தன. அதனால்தான் அவர் கள் அடியோடு அழிந்தார்கள். ஆசையின் வலிமைக்கும் அழிவுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. நாட்டை இழக்க ஆசை இடந்தராதபோது எல்லாவற்றையும் இழக்கத் தகுதியான பேராசை தோன்றி விட்டது.

ஒன்றின் மீது நாட்டம் வைப்பது (நாடுவது) ஆசை யாகாது. நாடிய பொருள் மீது பற்று வைப்பது தான் ஆசை யாகும். நாட்டம் என்பது குறிக்கோள், அதாவது லட்சி யம். ஆசை என்பது பற்று. அதாவது பந்தம். லட்சி யானுபவம் ஆசையாகாது. பந்தானுபவமே ஆசையாகும். லட்சியம் மனிதனை உயர்த்தும். பாச பந்தங்கள் மனிதனை அழுத்தும். நாட்டத்திற்கும் ஆசைக்கும் உள்ள வேற் றுமை உண்மையான வேதாந்திக்குத் தான் தெரியும்.

---

அசரசரம் எல்லாம் அரகரஎன் றேயியங்கி
வசமாகி நின்னில் மகிழ்தல்காண் பென்றேயோ

நிலையான பொருள் மீது ஆசை படியாது. நிலையற்ற— மாறுபாட்டிற்கான இலட்சணமுடைய பொருள்கள் மீது தான் ஆசை தாவும். மேலானதும் நிலையானதுமான பொருள் மீது ஆசை ஏற்பட முடியாது. நாட்டம் அதாவது லட்சியம் தான் ஏற்படும்.

ஆசை வளர்ந்து பேராசையாகிறது. வளரும் ஒன்று அழிந்தேயாக வேண்டும். ஆனால் ஆசையோ தான் அழிவது மட்டுமில்லாமல் தன்னுடைய கர்த்தாவையும் (ஆசை வைப்போன்) அழித்து விடுகிறது. மேலான லட்சியமோ தானும் அழியாமல் கர்த்தாவையும் அழிக்காமல் தானும் உயர்ந்து அவனையும் உயர்த்துகிறது.

பேராசையினால் துரியோதனாதியர்கள் யுத்த சன்னத்தமானார்கள். இரக்கத்தினால் அர்ஜுனன் யுத்தம் வேண்டாமென்றான். அர்ஜுனனுடைய இரக்கத்திற்கும் காரணம் ஆசையே. ரத்த பாசமும் உடலுறவும் ஆரம்பத்தில் அவனை யுத்தத்தை வெறுப்பவனாகச் செய்தன. கீதோபதேசம் அவனுடைய ஆசையையும் துரியோதனாதியர்களுடைய பேராசையையும் இணைத்து பாரதப் போர் என்ற நிகழ்ச்சியாக்கி இறுதியில் தர்ம சம்ரக்ஷண காரியமாக முடிவு பெற்றது.

இரக்கமும் ஆசையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. வீடுவாசல், மனைவி மக்கள் மீதுள்ள ஆசையால் தான் அவர்கள் மீது இரக்கம் பிறக்கிறது. ஆசையற்ற இரக்கம் இருக்குமானால் அது ஜீவகாருண்யமாகும். ஆரம்பத்தில் துரியோதனாதியர்கள் மீது பாண்டவர்கள் காட்டிய இரக்கம் ஜீவகாருண்யமாகாது. ரத்த பாசத்தால் கட்டுண்ட மன நெகிழ்ச்சியே யாகும். இரக்கம் குறிப்பிட்ட வரம்பைக் கொண்டது. ஜீவகாருண்யமோ வரம்பற்ற பரந்த தன்மையை யுடையது.

சிவத்தில் சிந்தையை நிறுத்தியவனே ஜீவகாருண்யமுடைய மனிதன். மனிதனுக்கு இரங்குவது ஜீவகாருண்யமாகாது ஜீவனுக்கு அதாவது ஆத்மாவிற்கு இரங்குவதே ஜீவகாருண்யமாகும்.

---

இருவினையும் மும்மலமும் இன்புதுன்பும் தீர்ந்தே
கருணைத் திருவடியைக் காண்பதுவும் என்றேயோ

ஜீவனை . சிவ மயமாக்குவதே ஆத்ம ஞானம். கீதை யின் லட்சியம் சிவ—ஜீவ ஐக்கியமேயாகும். பாத்திரங்கள் மூலமாக பரத்துவத்தைக் காட்டுகிறது கீதை. அது காட்டும் பாதை மிகத் தெளிவானது. சார்புடைய மனம் மனிதனுடைய பாமரத் தன்மை. சார்பற்ற—நடுவு நிலையான-சம புத்தியுள்ள மனம் பரத்துவதற்கு வழி காட்டுகிறது.

எந்த ஒரு குணமும் மனிதனுடைய ஆன்ம வளர்ச்சிக்கு விரோதமானதல்ல. குணத்தின் போக்கிலேயே அதை விட்டு விடாமல் லட்சியத்தின் போக்கை அனுசரித்துச் செலுத்தினால் அதுவே நிர்க்குண இலட்சணமாகும்.

அர்ஜுனனுடைய இலட்சியம், நோக்கம், வீரம், ஷட் குணங்கள் ஆகிய எல்லாவற்றையும் பரத்துவத்தை நோக்கி மடை மாற்றினான் கீதாசாரியனாகிய கண்ணன். அவனுடைய இரக்கம் ஜீவகாருண்யமாக உருவெடுத்தது. அந்த மேலான ஜீவகாருண்யமே துரியோதனாதியர்களை அழித்தது. இல்லை—அவர்களுடைய பேராசையை அழித்தது. அவர்களுடைய பேராசையும் அர்ஜுனனுடைய இரக்கமும் 'பரத்துவம்' என்ற லட்சியத்தோடு சங்கமமாவதற்கு கீதை பாதை காட்டியது! (தொடரும்)

---

# ஆசிய நாகரிகம்

## (தென்னாப்பிரிக்கா - டர்பன் திரு ச. மு. பிள்ளை அவர்கள்)

இந்தியா அனாதிகால முதலே உயர்தர நாகரிகத்திற்கு உறைவிடமாயிருந்து வந்திருக்கிறது. நாகரிகம், அதாவது ஞானம் அடையப்பெறாமல் முக்தி அடைய முடியாதென இந்து சாஸ்திரங்களில் திரும்பத் திரும்ப வற்புறுத்திக் கூறப்படுகின்றது. துக்கம் அல்லது துன்பம் அதிகப்படுவதே அறிவு என புராதன யூத நூலாசிரியர் ஒருவர் கூறியிருக்கின்றார். அவரது மனப்பான்மை இவ்விதமாகவே இருந்து வந்திருக்கிறது ஆனால் ஆரியர்களின் மனப்பான்மை வேறுவிதம். துன்பத்தின் முடிவே அறிவு என்பது அவர்களது கொள்கை. இவ்வறிவே, இவ்வுயர்

---

அற்புதமெய் ஆநந்தம் ஆனவனைக் கண்டடியேன்
புற்புதப்பொய் வாழ்க்கை பொலிவழிவ தென்றேயோ

தா ஞானமே தரிசனம் என்று அடிக்கடி குறிப்பிடப்படு கின்றது. என்ன தரிசனம்? என்ன தோற்றம்? என்றும் நித்தியமாயிருக்கும் பரம்பொருளின் தரிசனமே யாகும். சகலருக்கும் பொதுவாக இலங்கும் கடவுளின் தோற்றமே யாம். இதுதான் ஆசிய ஞானத்தின் மர்மம்.

ஆசியா முழுமையும் ஒன்றுபட்டதாக இருக்கிறது. ஏனெனில் பல யுகங்களாக ஆசியா ஆன்மஞான விளக்கம் பெற்றிருக்கிறது. இவ் வான்ம ஞானத்தை ஆசியக்காரர் கள் அறிவு முதிர்ச்சியாலும், ரஸஞ்ஞானத்தாலும், தரும சாஸ்திர முறைகளாலும் அடைந்து வந்திருக்கின்றனர். இந்தியா, சீனு, ஜப்பான், அரேபியா, ஆப்கானிஸ்தானம் முதலியவிடங்களிலுள்ள பேரறிஞர்களும், கவிகளும், தீர்க்கதரிசிகளும் இவ்விஷயத்தில் பெரிதும் கவனஞ் செலுத்தி வந்திருக்கின்றனர். இவ் விஷயத்தைப்பற்றி பல பாஷைகளிலும் பலவிதமாகக் கூறப்பட்டிருக்கின்றது. ஆனுல் இவைகளெல்லாம் தத்துவத்தில் ஒன்றுபட்டே யிருக்கின்றன என்று நான் நம்புகிறேன். ஏனெனில் ஆசியாவின் ஆன்மஞானம் ஒன்ருகவேதான் இருந்து வருகிறது. "என்றும் நித்தியமாயிருக்கும் பரம்பொருள் ஒன்றுதான்; அவருக்கு சாதிமத பேதங்கள ஒன்றுங் கிடை யாது" என்று ஓர் உபநிடதத்தில் கூறப்பட்டிருக்கிறது. எல்லோரிடத்திலும் நித்தியமாக இருந்துவரும் கடவுள் ஒருவர்தான் என்னும் உணர்ச்சியை கைத்தொழில்கள், கவிகள், தத்துவ சாஸ்திரங்கள், வழிபாடுகள் முதலிய யாவற்றிலும் வற்புறுத்த, ஆசிய ஞானம் இடைவிடாது பல யுகங்களாகப் பாடுபட்டு வந்திருக்கின்றது"

உலகிலுள்ள மதங்களெல்லாம் ஆசியாவில் தோன்றிய தற்குப் போதிய காரணங்கள் இல்லாமற் போகவில்லை. இந்து மதம், புத்த மதம், ஸொராஸ்டிரிய மதம், மகமதிய மதம் ஆகிய மதங்கள் எல்லாம் ஆசிய நாகரிகத்தையே, ஆசிய ஞானத்தையே அஸ்திவாரமாகக் கொண்டிருக்கின் றன. அவைகளெல்லாம் ஆசியக் கொள்கைகளையே வற் புறுத்துகின்றன. கிறிஸ்தவ மதம் மேல்நாட்டிற்குக் கீழ்

---

புகழ்ந்தார்க்கும் மெய்யடியார் பொன்னடிகள் சூடி
இகழ்ந்தார் திசைபாரா ஏற்றமுறல் என்றேயோ

நாடாகிய ஆசியாவால் கொடுத்துதவப்பட்ட மதமாகும். ஆசியா ஐரோப்பாவைப் போல், ரஸாயன சாஸ்திரங்களுக்கும், மதத்திற்கும் முரண்பாடுகள் பலவுண்டு என விவாதிப்பதில்லை. அறிவும் இயற்கையும் ஒன்றுக்கொன்று முரண்கொண்டது என்று மேனாட்டு அறிஞர்கள் கூறுவதுபோல் கீழ்நாட்டு மேதாவிகள் எண்ணுவதில்லை. இந்திய ஞானம் இயற்கையினின்றுமே உற்பத்தியாகிறதெனக் கருதப்பட்டு வருகின்றது. உலக காவியங்களுள் சிலாக்கியமெனக் கருதப்படும் பல சாஸ்திரங்கள் ஆரணிய சர்வகலாசாலைகளாகிய ஆசிரமங்களிலேயே தயாரிக்கப்பட்டன. ஆசிய ஞானம், ஐரோப்பிய ஞானத்தைப் போல் அக்கிரம வழிகளில் செல்லும் தன்மையுடையதல்ல. இந்தியாவின் புராதன ஞானம், நாகரிகம், பிறநாட்டவர் மனம் வருந்தக்கூடிய தேசியக் கொள்கையை விருத்தி செய்யவில்லை. மனித வர்க்கத்தாரிடம் மரியாதையும், அன்பும் காட்டி வரக்கூடிய தேசிய உணர்ச்சியையே வளர்த்து வந்தது. உலகிலுள்ள ஜந்துக்கள் யாவும் உயிருள்ளவைகள் என்றும், அவைகளிடத்தில் அன்பு பூண்டொழுக வேண்டுமென்றும், இந்து மதமும் புத்த மதமும் போதிக்கின்றன. இதுவே இவ்விரு மதங்களுடைய உன்னத கொள்கையாகும்.

உலகத்திற்கு இப்பொழுது தேவைப்படுவது ஆசியாவின் உன்னத கோட்பாடுகளேயாம். ஆசியாவின் ஞான ஒளியே அந்நாடு கடந்த காலங்களில் மகோன்னத நிலையிலிருந்ததற்குக் காரணம். கடலொளியைப் போலிருக்கும் ஐரோப்பாவிற்கு தற்பொழுது, தனது நாகரிகத்தைச் செழுமைப்படுத்திக் கொள்வதற்கு அவசியமாகத் தேவைப்படுவது ஆசியாவின் ஆன்மஞான விளக்கமே யாகும். "ஒருக்கால் ஆன்ம ஞானஒளி கீழ்நாடுகளிலிருந்து இங்கு வந்தது. மீண்டும் ஐரோப்பாவிற்கு இவ்வொளி கீழ்நாடுகளிலிருந்து வரும்" என்று ரஸாயன சாஸ்திர நிபுணர் - ஆசிரியர் திண்டல் என்பவர் கூறியிருக்கிறார். மேல்நாடுகளுக்கு ஆசியா அளிக்கக்கூடிய ஆன்மஞானத்தில் எனக்கு அளவற்ற நம்பிக்கை இருந்துவருகிறது. உலகம் இந்தியர்

---

ஆதியெனும் மாயை அறிவில் மயக்ககன்று
சோதியுனை யுள்கிச் சுகமுறுத லென்றேயோ

களிடமிருந்து ஓர் செய்தியை எதிர்பார்க்கின்றது. இந்தியர்கள் அச் செய்தியை உலகினர்க்கு அளிக்கக்கூடும். ஆனால், மனித வர்க்கத்தார்களுக்கு ஊழியஞ் செய்யும் நோக்கத்துடனேயே அச் செய்தியை இந்தியர்கள் உலகினர்க்கு அளிக்கின்றனர் என்ற நிபந்தனையுண்டு.

தற்பெருமை, த்வேஷம், குரோதம் முதலியவைகளோடு கூடிய தேசபக்தி இந்தியாவை உன்னத நிலைக்குக் கொண்டுவராது. "அமரிக்கையாகவும் சாந்தமாகவும் இருப்பதால் நீங்கள் போதிய தைரியம், சக்தி உள்ளவர்களாக இருப்பீர்கள். வீண் ஆடம்பரமின்றி நீங்கள் இருப்பீர்கள். எல்லோரிடமும் பணிவுள்ளவர்களாகவும், மரியாதையுள்ளவர்களாகவும், எவரையும் புறக்கணிக்காமலும் இருப்பீர்களாயின், நீங்கள் பொதுஜனங்களால் நன்கு மதிக்கப்படுவீர்கள். பொதுஜனங்கள் உங்களைத் தலைவர்களெனக் கருதி நடப்பார்கள்" என்று சீன தேசத்து மகான் ஒருவர் கூறியிருக்கின்றார். நான் நம்புகிறபடி - சரித்திர உண்மை விரும்புகிறபடி. இந்தியா உலகிலுள்ள இனத்தவர்களுக்கு ஆன்ம ஞானத்தில் தலைமை பூண்டு விளங்கவேண்டுமானால், இந்தியா வெகு பவ்யமாகவும், மனிதவர்க்கத்திற்கு ஊழியஞ் செய்யும் நாடாகவும் கடவுளின் ஊழியனைப் போல் இருந்துவரவேண்டும். லோகாதயக் கொள்கையே ஓங்கி நிற்கும் இக்காலம், இயந்திரங்களால் யாவும் நடைபெறும் இக்காலம், இனியும் ஆசிய ஞானத்தால் காப்பாற்றப்படலாம்.

---

# பண்பாம் பயன்

(சிவானந்த விஜயலக்ஷ்மி)

['மனிதன் எவன்' என்பதை ஆராய்ந்த நாம், அவன் உண்மை மனிதனாகில் என்ன பயன் கிட்டுகிறது என்பதையும் சற்றே சிந்திப்போம்.]

பண்பு—மலருக்கு மணம்; பழத்திற்குச் சுவை; இசைக்கு லயம், நயம்; சொல்லிற்குக் குழைவு; இவைபோல

---

ஆரணங்கட் கெட்டாத அத்தநினைக் காட்டுகின்ற
**காரணமெய்ம் மோனத்தால் காண்பதுவும் என்றேயோ**

மனிதனுக்கு பண்பு அத்தியாவசியமாகிறது. பார்க்க அழகிய வண்ணமும் வடிவமும் கொண்ட ஒரு மலரைக் கண்டு, ஆவலுடன் அதனருகில் செல்கிறுன் ஓர் மனிதன். தொட்டான்—என்ன ஏமாற்றம்!—இது மணமற்ற மலர், காகித மலர், வெறும் வெளி வேடம் என்று அறிகிறுன்— இன்பத்தைப் பருகச் சென்ற அவன் வெறுப்படைந்து திரும்புகிறுன். சங்கீதம் இனிமையாக இருக்கும் என்றெண்ணி காது கொடுக்கிறுன்—லயமும், நயமுமற்ற நாதத்தைக் கேட்டால், என்ன ஏமாற்றம் ஏற்படுகிறது. சொல்லில் குழைவு கொஞ்சாது. கொடுமை கூத்தாடினுல், என்ன மனவேதனை ஏற்படுமோ, அதுவே பண்பாடு அற்ற மனிதனைக் கண்டு உலகம் கொள்ளும் உணர்ச்சியாகும்.

பண்பு—இது அறிவும் அன்பும் கலந்த ஓர் அபூர்வக் கூட்டுப் பொருள் வெற்றறிவு, அழகிய, ஆனுல் உயிரற்ற சடலம் போல உபயோகமற்றதாகிறது. சற்று அதிக நேரம் வைத்திருப்பின் நாற்றமெடுக்கும் ஊற்றைச் சடலம் போல், சற்று அதிகம் பயன்படுத்திடின் நாசம் விளைவிக்கும் அறிவு. வெறும் அறிவினுல் பண்பாடு ஏற்படாது. பண்பாடு அன்பினுல் ஏற்படுவது அறிவுடன் பண்பாடும் கலந்து விடுமாயின், பாலுடன் தேனும் பழமும் கலந்தது போலாகி விடுமல்லவா. இன்றைய உலகிலே, அறிவு ஓங்கி, அன்பு மங்கி, மறம் உயர்ந்து, அறம் தாழ்ந்து இருக்கும் சூழ்நிலையில், பண்பாடு ஒன்று தான் அனைவருக்கும் தேவையாக இருக்கிறது.

சமயத் துறையில் செல்பவர்க்கும், உலக விஷயங்களில் ஈடுபட்டிருப்பவர்க்கும், அரசியலில் அலைபவர்க்கும், ஆத்மீகத்தில் ஆவலுற்றவர்க்கும், ஏன்—இவ்வுலகிலுள்ள மனித வர்க்கம் அனைத்திற்குமே தேவையான ஒரு பொருள் பண்பு ஒன்றுதான். உண்டியும், உடையும், வாழ இடமும், படிக்க வசதியும், எத்தனை தேவை என்றெண்ணுகிறுமோ, அதைக் காட்டிலும் பன்மடங்கு அவசியமாகத் தேவைப்படுவது பண்பு எனும் இப்பெரும் பொக்கிஷம் தான். உடலைப் பேண உணவு தேவைப்படுவது போல உள்ளத்தைப் பேண ஓர் உத்தமமான ஆகாரம். உடலைப்

---

இன்று முன் பின் என்னும் காலத்தின் ஈடழிய
நின்றுன் திருவருளில் நேர்வுபெறல் என்றேயோ

பேண, உணவைத் தேடும் நாம், உள்ளத்தைப் பாது காக்கும் இவ்வொண் பொருளை நாடாதிருத்தல் எத்தனை பாபகரமான செயல்! இனியாகிலும் இப் பாபத்திலிருந்து விலக முயலுவோமாக!

தாமரர்க்கும் குடியல்லாத் தன்மையான சங்கரனின் திருச் சங்கத்திலே சேர்ந்த தவயோகியரும் கூட, இத் தெய் வீகத் தன்மைக்காகப் பாடுபட்டு, பரிதவித்து, இறைவ னிடம் வேண்டி நின்றனர். "குலம் பொல்லேன், குணம் பொல்லேன்" என்று அவர்கள் விடுக்கும் அபராத மன்னிப் புப் பத்திரத்தைப் பார்க்கையில், பாடுகையில், கேட்கை யில், உருகாத உள்ளம் உலகில் உண்டோ? "விலங்கல் லேன், விலங்கல்லாது, ஒழிந்தேனல்லேன்". இதுவே உண் மைப் பண்பாடு யாது என்பதை நமக்கு உணர்த்துகிறது. மிருகமாக இருக்க ஒப்பவில்லை. ஏனெனில், 'மனித' [மனம் எனும் கருவி, வரம் பெற்ற] தேகம் கொடுக்கப்பட்ட பின் மிருகமாகுதல் கூடுமா? புறத்திலே, தோற்றத்திலே மாற்றம் ஏற்பட்டு விட்டது. ஆனல், அகத்திலே அம் மிருகச் சாயல் தானே மிளிர்கிறது. இது மாறுமா? மறை யுமா? தெய்வச் சாயல் கிட்டுமா? தெய்வச் சாயல் கிட்டாத போதிலும் நடுவே நிற்கும் மனிதச் சாயலாவது கிடைக் குமா? என்று ஏங்குகிறது, பண்பாடடையப் பரிதவிக்கும், பிரார்த்திக்கும் உள்ளம்.

புறத்திலே புலப்படாது, அகத்திலே மிளிர்வது பண்பு. அகத்தில் பண்பு நிறைந்திருப்பின், முகத்திலேயும் ஒளி தோற்றுவிக்கக் கூடிய ஓர் ஜோதி இது. மனிதனுள் மிரு கமும் மறைந்து தான் விளங்குகிறது. முதல்வர்க்கம் முளைத்தெழாது தடுத்தால், தெய்வம் தானே மனிதன் பால் மிளிரக்கூடும். வெறும் புல்லும் முள்ளும் முளைத்தெழும் நிலத்தை, முறையாகச் செம்மைப்படுத்தி, சிரத்தையாய்ப் பயிர் செய்து, சீராகப் பாதுகாத்தால், புல் விளையும் அதே பூமியில் பொன்மணியென நெல்மணி நிரம்ப விளைதல் கூடு மல்லவா. ஆனுல் அந்தோ, பாடு அனைத்தும் பட்டு, உழுது, நிலம் திருத்தி, நீர் பாய்ச்சி, உரமிட்டு, கரும்பு விடுத்து, கடுகு விரைத்துக் களிப்பதாக அல்லவா இருக்கிறது!

---

வன்பிழைகள் நோக்கா மருத்துவனு வந்துதவ
சன்மநோய் தீர்ந்து சதுராடைதல் என்றேயோ

அறிவை வளர்க்கும் உலகம் ஏன் அன்பைப் பெருக்குதல் கூடாது? இன்றைய உலகம் உள்ளது! மிருகமும் பேயும் தலை விரித்தாடும் மனத்தைப் பாகுபாடு அடையச் செய்துவிடில், அஃது பண்பும் பயனும் பொருந்தியதாக மாறுவதில் ஐயமுண்டோ!

நாகரீகம், பண்பாடு இவை இரண்டும் ஒன்றாக ஆக முடியாது. புறத்தே எத்தனை விரிவு ஏற்படுத்திக் கொள்ளுதல் கூடுமோ, அத்தனை தன்னை விரித்து அகத்தை மறந்து, புற வெறியாம் வெள்ளத்தில் அடிபட்டு ஓடுவது நாகரீகம் எனும் நாமத்தில் நடமாடும் பேயாகும். புலப்படாத பல பொருட்களை ஆராய்ந்து, விஞ்ஞானத்தில் வெற்றி கண்டு, பல துறைகளிலும் புற வளர்ச்சியுற்று, அறிவைப் பெருக்கி, அன்பைச் சுருக்கி, விஞ்ஞானம் தரும் பல சுகங்களைக் கொண்டு நாகரீக வாழ்க்கையில் ஈடுபடுவதால் ஒரு மனிதனை பண்பாடு நிறைந்தவன் எனப் பகர்வது முடியாது. பண்பாடு அகத்திலே நிகழும் ஓர் மாற்றம். பண்பாடு நிரம்பியவனின் வாழ்க்கை பல்லோராலும் போற்றப்படுவது மட்டுமன்றி அது பலருக்கும் பயனளிப்பதாகவும் பரிணமிக்கும். தான், தனது என்று தனித்துப் பிரித்து தன்னலம் பாராட்டும் பண்பு 'நாகரீகம்' எனும் பெயர் பெற்ற காட்டுவிலங்குத் தன்மையாகிறது. தன் வயிற்றை வளர்க்க, நிரப்ப, வேறொரு மிருகத்தை விழுங்கும் விலங்கினம் போல, தன் சுகத்திற்காக, பிறரைத் துன்புறுத்தியும், தன் பயமற்ற சுக வாழ்க்கைக்காக, பிறரை ஆக்ரமித்தும், தன் சுதந்திரத்தைப் பாதுகாக்க, பிறரை அடக்கியும் வாழும் வாழ்க்கை மனித இனத்தை மேன்மைப் படுத்தும் பண்பு ஆகுமா? இதுதானா நாகரீகம். இத்தகைய நாகரீகத்திலே நாட்டம் கொள்ளும் மக்களும் நாடுகளும் விஞ்ஞானத்தைத் தான் தமது பரதேவதையாக வழிபடுதல் கூடுமேயல்லாது அவ்விஞ்ஞானத்தைப் படைத்தவனும், அதனை அறிய அறிவைப் படைத்தவனுமான இறைவனை, அவனது தத்துவத்தை அறிதலும், உணர்தலும் கூடுமா? இறைவனின் அடிப்படையில் எழுப்பப்படாத எந்த நாகரீகமும் உண்மைப் பண்பு ஆக மாட்டா. அன்

---

ஈரைந்து கால்நட்ட எட்டுச்சாண் கட்டடத்தில்
ஓரைந்து பேர்தொல்லை ஒழிவதுவும் என்றேயோ

பும் அறமும் ஏற்பட்டால் அதுவே பண்பும் பயனுமாகும் என்பது மேலோர் கோட்பாடு. எனவே, பண்புக்கு அடிப் படை அன்பும் அறமுமே என்ருகிறது. அன்பும் அறமும் எவன்பால் ஒன்று சேருகிறதோ, அவனே பண்பாளன் எனப் பேசப்படுகிருன். பண்பு நிறை அப்புனிதன் போன்ற பெரியோர்களால் தான் இவ்வுலகம் காக்கப்படு கிறது. இது இல்லையேல், இந்நிலவுலகு என்ருே மண்ணுய்ப் போயிருந்திருக்கும்!

பலதரப்பட்ட துறைகளில் மனிதன் முன்னேறிய போதிலும், அவையனைத்திற்கும் ஆதாரமான 'மனிதப் பண்பு' அவனிடம் இராதுபோயின் அவனை மனிதன் என் றழைக்க முடியாது. இப் பண்பு பெறுவதற்கு பல்கலைக் கழகத்தில் பயிற்சி கொடுக்கப்படுவதில்லை. இது பரமன் அடி நீழலிலே பெற வேண்டிய பட்டமும் பயிற்சியுமாகும். இதனைப் பெற்ற மனிதனே அகத்திலுள்ள அரக்கனை மாய்த்த ஆத்ம வீரனுக முடியும். அத்தகைய வீரனுக மாறும்படி கண்ணன் பார்த்தனுக்குக் கூறினுன். புஜ பலமும், அறிவுப் பலமும், தோற்றத்திற்கு ஏற்றம் கொடுத்த போதிலும், அறிவின் உண்மைப் பயன் அகத் தினை அழகுபடுத்துவதே யாகும். உயர்ந்த அறிவு பெறு வது, உள்ளுறை 'வஸ்து'வை அறியவும் உணரவுமே. நல்ல வைரமாக இருந்த போதிலும் அஃது நன்கு பட்டை தீட் டப் பெருதிருப்பின், அதற்குரிய மதிப்பும் பெருமையும் அதற்குக் கிட்டுவதில்லை. அதுபோல, கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினுலும், பிற ஆராய்ச்சிகளில் மேம்பாட டைந்திருப்பினும், உடற்பலம் மிகுந்திருப்பினும், 'பண்பு' எனும் பட்டை தீட்டப்படாத பக்ஷத்தில் அம் மனித னுக்கு உரிய மதிப்பு மக்களால் கொடுக்கப்பட மாட்டாது. நல்ல வளமான பூமியை பண்படுத்தாது காட்டுச் செடியும் விஷப் பூண்டும் வளர விடுவதுபோல, மிகப் பயனுள்ள கருவியான மனதைப் பக்குவப்படுத்தி பண்புடையதாக் காது வாழ்க்கையின் வளத்தையே கெடுக்கும் விஷமாக்கு வது தகுமோ? புடம் போட்ட தங்கம் அழுக்கிலிருந்து நீங்கி யிருப்பதால் 'சுத்தமானது' என்று மதிக்கப்படுவது போல,

---

**வானஞானக் கொடையான் திருவடியை வாய்வாழ்த்தி**
**யீனஞானம் நீங்கி யின்புறுவ தென்றேயோ**

மனமும் நன்கு புடம் போடப்பட்டு நற்பண்பினுல் அசுர குணமான அசுத்தங்களைக் களைந்து உண்மையான நல்ல 'மாற்ருேடு' விளங்குமாளுல், அம் மனத்திஞல் மாநிலத்திற் கும் நற்பயன் ஏற்படும். அதையே ஊர் நடுவிலுள்ள கேணி; நகர் நடுவே பழுத்த சுவையுள்ள பழங்களைத் தாங்கி நிற்கும் மரம் இவற்றிற்கு ஒப்பிடுகின்றனர் மேலோர்.

இதுவரை உலகிலே எண்ணற்ற இராச்சியங்களும், கணக்கற்ற அரசுகளும் தோன்றி, தோன்றிய சுவடு இன்றி மறைந்து விட்டன. கடந்த கால சரித்திரம் சொப்பனமாகத் தோன்றுகிறது. பண்டைய அரசர்களால் கட்டப்பட்ட கட்டிடங்களும், எழுப்பப்பட்ட மண்டபங்களும், அவர்களின் மமதையையும் கர்வத்தையும் பிரகடனம் செய்வதாகவே இருந்தன. தாங்கள் உலகை அடக்கி ஆள்கிருேம் என்ற அகங்காரத்தின் ஆர்ப்பாட்டமாகவே அவைகள் அமைந்ததால், இன்று அவற்றின் சுவடுகூட இல்லாது மறைந்து விட்டன. ஆனல், பண்பிஞல் உயர்ந்த உத்தமர்களின் நினைவு மக்களின் நெஞ்சிலிருந்து மறையாத கற் கோயில்களாக விளங்குகின்றன. எவராலும் தகர்க்க முடியாத இவ்வகக் கோயில்களில் பண்பிற் பெரியாராம் அப்புனிதர்களின் திருவுருவம், காலத்தின் கரத்தில், சிதைவுறாத அன்பு நினைவெனும் சிலைகளாக அமைந்துள்ளன. உள்ளத்தைப் பண்பாடு செய்யாது உலகைப் பண்படுத்த முடியாது. உள்ளப் பண்பு நிறைந்ததான அப்பெரியோரின் வாழ்க்கை உலகைப் பண்படுத்தப் பெரிதும் உதவுகிறது. அவர்களின் பண்பு நிறை மனத்தின் மணம், எவ்விதத் தங்கு தடையுமின்றி, உலகெங்கும் பரவுகிறது. அவர்களின் வாழ்க்கையும், சொல்லும், செயலும் பலருக்கு நல்லதொரு பாடமாக, உபதேசமாக அமைகின்றன. அவர்களின் தூய உள்ளம் உலகை எவ்வித தனித்த முயற்சியுமின்றி வெகு சுலபத்தில் நல்வழிப்படுத்துகிறது. ஒரு தீபம் மற்ருெரு தீபத்தை ஏற்றி, தானும் ஒளிகுன்ருது ஒளிர்வதற்கு ஒப்ப, இம் மஹனீயர்கள் பண்பாடும் வாழ்க்கையும் பயனளிக்கின்றன.

---

**உத்தமர்கள் ஆன்மா வுடல்பொருள்கள், தானேற்கும்**
**அத்தனெனக் கங்ஙன் அருள்புரிதல் என்றேயோ**

நெஞ்சத்தைப் பண்படுத்த உள்ளறிவு சதா முயன்று வருகிறது. உள்ளறிவின் உறைகளைச் சட்டை செய்யா விடில், பண்பாடு பெருத மனம் நாளுக்கு நாள் அழுக்கடைந்து, எடுக்க முடியாத, நீக்க முடியாத, துரு ஏறிய இரும்பு போல ஒன்றுக்கும் பயனற்றதாகி விடும். கீழான நிலையிலிருந்து மனதை மேம்படுத்துவதே பண்பின் பயனாகும். இந்திரிய பரமாக ஆசாபாசங்களின் விருப்பு வெறுப்புக்களின் சூழலிலிருந்து உயர்த்த, ஆத்ம நினைவிலே மனதை அமரச் செய்வதே பண்பின் லக்ஷ்யமாகும். எது இவ்வுலகிலுள்ள உயிர்கள்பால் நமக்கு இரக்கத்தை ஏற்படுத்துகிறதோ, இவ்வுலகிலே, உலகிற்காக உழைக்கப் பிறந்த கருவி இத்தேகம் என எது உணர்த்துகிறதோ, இவ்வெண்ணத்தைச் செயல்படுத்த எது நம்மை ஊக்குகிறதோ, எது நம்மையும் உலக நல்வாழ்வையும் இணைக்கிறதோ, அதுவே உண்மையான பண்பாடாகும். உலக நன்மைக்கும், நல்வாழ்வுக்கும், அமைதிக்கும் ஆசைப்படாது, தன்னலம், தன் சுகம், தன் வாழ்வு என்று தனித்துப் பிரித்து நம்மை அதற்கான செயலில் ஈடுபடுத்தும் குணம் பண்பாடாகாது. அது நம்மை இறைவனிடத்திருந்து பிரித்து வேறுபடுத்தும் அசுர சக்தி என்பதில் ஐயமில்லை. இச்சக்தி நம்மை ஆக்ரமிக்காது, நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

இப்பிறவியில் இனியொரு பிறவி எடுப்பது—மனித ஜன்மத்தில் தெய்வத் தன்மை பரிணமிப்பது—மனிதப் பண்புடன் வாழ்ந்து அது தெய்வப் பண்பாக விகசிப்பது தான் வாழ்க்கையின் நோக்கம். பண்பாளர்கள் யார்? அவர்தம் செயல்கள் யாவை? எவ்வுயிரும் பொது எனக் கண்டு, அவைகள் பால் இரங்கி, உபகரிக்கின்ற செவ்வியர். அவர்கள் சிறிதளவும் பேதம் பாராது எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி, ஒத்து உரிமை பாராட்டி வாழ்வார்கள். கருணையே வடிவான அப்பெரியோர்கள் 'வாடிய பயிரைக் கண்டால்' வாடுவார்கள். பசியினால் வீடு தோறும் பிச்சை ஏற்றுஉண்ணும் எளியரைக் காணில்பரிதவிப்பர்.நோயுற்றோரைக் காணில் நெஞ்சு பதைப்பார். மண்ணுலக உயிர்களின்

---

ஊமை கனவைப்போல் ஓத இயலாத
வாம அனுபூதி வருவதும் என்றேயோ

துன்பங்களைக் கண்ணுற் காணவோ, செவியாற் கேட்க வோ சகிக்க மாட்டார்கள். எனவே, ஏழை எளியாரிடம் தம் தாராளத் தன்மையையும், துன்பமுற்றோர் பால் இரக் கமும் காட்டி, நோயுற்றோருக்கு உடனுதவியும், அறியாத எளியாருக்கு அவசியமான போதனைகளும், தாழ்த்தப்பட் டோருக்கு தக்க உதவியும் தந்து உதவுவார்கள். இத்த கைய பண்பாளர்களின் செயல்களே உண்மைச் சீர்திருத் தம் ஆகும். இஃது இல்லாத மக்கள் செய்யும் சீர்திருத்தம் அனைத்தும் பழய இடிந்த வீட்டை ஏதோ கொஞ்சம் மரா மத்துச் செய்து, வெள்ளையடித்து வைப்பதற்கு ஒத்து இருக்கும். ஒரு மழை பெய்தால் வீட்டின் 'சாய' மெல் லாம் "வெளுத்து" விடுமல்லவா!

உண்மைப் பண்பாளர் தாமும் எப்போதும் இன்பத் தில் திளைப்பார். பிறரையும் இன்புறச் செய்வார், பண் பாடு, அகத்தை விரித்து, அருளைப் பெருக்கி, உள்ளத்தைத் தூயதாக்கி, எண்ணத்தை எளியதாக்கி, வாழ்க்கையை பயமற்ற, கவலையற்ற, பயனுள்ள கனியும் மலரும் நிறைந்த சோலையாக்குகிறது. பண்பு நிறை நெஞ்சம் மூலதனம் பாங்கி (Bank) ஒன்றிற்கு ஒப்பாகும். அஃது ஒரு நாளும் தோல்வி அடைவதில்லை. ஆனால் நிரந்தரமாக பங்குப் பணம் (dividend) கொடுப்பதாகவும் அமைகிறது

பண்பாளர்கள் பலர் தோன்றிடின், நாட்டில், ஏன், உலகத்தின் அமைதியும், அருளும், ஐச்வர்யமும் ஒருநாளும் பாதிக்கப்படாது காக்கப்படும். பண்பு ஒன்றுதான் நம் மையும் மிருக இனத்தையும் வேறுபடுத்துவதால், மனிதப் பண்பும் தெய்வப் பண்பும், நம்பால் பூரணமாகப் பரிண மிக்கச் செய்வோமாக!

---

# ஆறுபடை வீடுகளின் தத்துவ அமைதி

திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை B.A., B.T.

முன்னுரை.

செவ்வேள் பரமன், உயிர்களாகிய நம்மை உய்விக்கத் திருவுளங்கொண்டு திருக்கோயில் கொண்டுள்ள பதிகள்

ஊனுடலச் சோறுபொதி ஒழுகுமல பாண்டமிதை
நானென் றெணும்மோகம் நலிவதுவும் என்றேயோ

பல ஆயிரங்கள்; மலைகளும் வெகு கோடியாகும். ஆயினும் "சேயோன் மேய மைவரை உலகமும்" என்ற ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியத்தின்படி குமரனது விருப்பமான இருக்கைகள் குறிஞ்சி நிலத்தனவாகும் மலைப் பகுதிகளே யாகும்.

மலைகளின் மாண்பு

மலை, நானிலப் பகுதியில் மேனிலமான முதல் நிலமாக முன்வந்து நிற்பது. அதிக தூரத்தில் வருபவர்களையும் அலையவைக்காமல் இடங்காட்டி அறியவைப்பது. அளக்க முடியாத அளவும் பெருமையும் உடையது. அசைவறு நிற்கும் அருமையும் தோற்றமும் அமைந்தது. வற்று வளந் தரும் வண்மையுடையது. தவமணிகளுக்கும், நவமணிகளுக்கும் தாயகமாவது. அரிய மூலிகைகள் அநேகம் கொண்டது. மழைமுகில் தவழும் மகிமையது. பெருஞ்சுனை கொண்ட பெற்றியது. ஆறுகள் தோற்றத்திற்கு ஆதாரமானது. குறவள்ளி குலத்தினர் கூடியுறைவது ஆனையும் மயிலும் ஆவலோடு அடைவது. திராப்பிணி தீர்க்கும் சிறப்புடையது. இயற்கை எழிலுக்கு இன்ப நிலயமாவது. குவலயத்தின் வெம்மை ஒழித்துக் குளிர்ச்சி தரும் குணமுடையது. இவை போல் உள்ளன பிறவுங் கொள்ளுக.

குமரனும் குறிஞ்சியும்:

குறிஞ்சி நிலத்தின் தலைவன் குமரன். குறிஞ்சியின் பண்பெல்லாம் குமரனிடத்தும் காணலாகும். குமரன் அண்ணு மலையின் அருமை மைந்தன்; மலை மங்கை மகன்; மலைக்குடை யேந்தின மால் மருகன்; மலை பிளந்த வடிவேலன்; மலைக்குற வள்ளிக்கு மணாளன். மலைநிலத்து மயிலே அவன் ஊர்தி; மதயானை அவனது சீதனச் சொத்து; சேவலே அவனது திருக்கொடி. கல் போன்ற நெஞ்சுடையார்களும் கந்தனருள் கிட்டுமோ என்று நெஞ்சு உடையாத வண்ணம் கல் நிறைந்த மலைத் தலங்களையே குகவேள் தன் சிறப்பான கோயிலாகக் கொண்டுள்ளான்.

---

எதிலும் சிவம்கண்டார் இன்பம்கண் டார்கள்
அதையுணரேன் அந்தோ அருள்பெறுதல் என்றேயோ

186



ஆறுபடை விடுகள்:

சண்முகத் தெய்வத்தின் தண்ணளி பரவத் தங்கிய மலைப்பதிகள் தம்மில் ஆறு திருப்பதிகள் சிறப்பில் சிறப்பாகப் பேசப்படும். இவை, முறையே திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர்சோலை எனவாம். இவைகளை ஆறு படைவிடுகள் எனவும் அழைப்பதுண்டு.

படைவீடு;

படை - சேனை. வீடு - நிலயம். சேனைகளின் தங்குமிடம் படைவிடு எனப் பேர்பெற்றது. பழங்காலத்தில் நமது நாட்டுக் காவலராகிய மன்னர்கள் தாம வசிக்கும் மாளிகைகள் போல அழகும் சிறப்பும் அமைய உலகுயிர் அனைத்திற்கும் காவலனுகிய இறைவன் ஆலயத்தைக் கட்டினர். இதனுல்தான் அரசனது இருக்கையான அரண்மனைக்கும் ஆண்டவனது இருக்கையான ஆலயத்திற்கும் 'கோயில்' (கோ + இல் — இறைவன் + வீடு) என்ற பெயர் வழங்கலாயிற்று. எய்தும் இன்னல்களை எல்லாம் களைந்து காக்க வல்ல கடவுள் அருளையே நம்பியிருந்த அரசர்கள் தமது படைகளையும் கோவில்களிலேயே வைத்தல் நலமெனக் கருதினர்; உரிய காலங்களில் அங்கிருந்து போர்க்களத்திற்குக் கொண்டு போயினர். ஆதலால் ஆலயங்கள் படைவீடாயின என்பது ஒருசிலர் கூற்று. இங்ஙனமின்றிப் படைவீடு என்பது தலைநகர் எனவும் 'காவல்கொண்ட கடிநகர்' என்றும் கருதினருமுளர்.

'ஆறுபடை வீடு என்ற ஆட்சி'

முருகனது தலங்கள் ஆறும் 'ஆறு திருப்பதி' 'அறுபதி நிலை' என்றே நமது அருணகிரியாரால் பாராட்டப் பெற்றுள்ளன.

குமரனருள் பெற்ற ஸ்ரீ குமரகுருபர அடிகளும் அருள்வாக்காக எடுத்த முதல பிரபந்தத்தில் "ஆறு திருப்பதி கண்டு ஆறு எழுத்து மன்பினுடன், கூறுமவர் சிந்தை குடிகொண்டோனே" என்றும் கூறுகிருர். ஆயின்

---

ஏகமாய் எல்லாமாய் நின்ருய் உனை யுள்கிப்
பாகப்பட் டெங்குநினைப் பார்த்திருப்ப தென்றேயோ

படைவீடுகள் என்ற பெயர் பிற்காலத்தில்தான் ஏற்பட்டன என்று தெரிகிறது. இப் பெயர் வந்த காரணம்பற்றி திருப்புகழ் உரையாசிரியர் தணிகைமணி ராவ்பஹதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளை M.A. அவர்கள், "நக்கீரரிடத்தும் அவர் அருளிய திருமுருகாற்றுப் படையிலும் அருணகிரியார்க்குப் பெருமதிப்பு உண்டு. அதனால், திருமுருகாற்றுப் படையிற் குறித்த ஆறு திருப்பதிகளின் தியானச் சிறப்பையே (கந்தரந்தாதி) நூலில் முதற் பாட்டாக எடுத்துரைத்தார். இங்ஙனம் நக்கீரர், அருணகிரியார் இருவரும் இந்த ஆறு திருப்பதிகளுக்கு ஏற்றந் தந்த காரணத்தால் திருமுருகாற்றுப் படையிற் சொல்லப்பட்ட ஆறுவீடுகள் - முருகன் அடியாரால் என்றும் பாராட்டப்பட்டு 'ஆற்றுப் படை வீடுகள்' என முதலில் வழங்கிப் பின்பு 'ஆறுபடை வீடு' என மருவி வழங்கலாயின" 'படை வீடு என்பதற்குள்ள தலைநகர், காவல்கொண்ட நகர் என்னும் பொருள்கள் இந்த ஆறு வீடுகளுக்கும் பொருந்தா. ஆதலின், மரூஉ என இங்குக் காட்டியவாறு கொள்வதே சாலப் பொருத்தமாம். இதனால்தான் திருப்புகழிலும் பிற பழைய நூல்களிலும், ஆறு படைவீடு என எங்கும் கூறப் படவில்லை" என்று கூறுவதும் கருதிக் கொள்க. ஆறு படை வீடுகளும் திருமுருகாற்றுப் படை குறித்த முருக வேள் நிலையங்கள் எனக் கொள்ளலாம்.

(2) முருகனுக்கு 'சேனானி' 'தேவ சேனாபதி' என்ற திருநாமங்களுள. தேவர்கள் படைத் தலைவனாயிருந்து புறப் பகை ஒழித்ததாலும் அடியர் காவலனாகி அகப் பகை அறுப்பதாலும் முதல்வனுக்கு அப் பெயர் வந்தது. அவனது நிலயம் ஆதலின் படைவீடுகள் என்ற பெயர் ஏற்பட்டது.

ஆறுபடை விடுகளின் உள்ளுறை:

இவைகள் சிறப்பாகப் பேசப்படுவதன் உண்மையை இனிச் சிந்திப்போம். இவற்றிற்கு அமைந்த பெயர்களாலும், இத் தலங்களைப்பற்றிய திருப்புகழ் முதலிய அருட்

---

நேசமுளேன் நெஞ்சில் நினைக்கும் நினைவறிவை
தேசினகத் தோன்றியெனைத் தேர்ந்துகொள்வ தென்றேயோ

பாக்களாலும், பிற சான்றுகளாலும் சில உண்மைகள் புலனாகின்றன.

பெயர்கள் பேசும் பெருஞ் சிறப்பு.

ஆறுபடை வீடுகள் புற உலகத்தில் அமைந்துள்ள ஆறு தலங்களாக இருந்தாலும், இவை நம் உடலுக்கும் உயிருக்கும் நிலைபேறான உறுதி தருவனவாக அமைந்துள்ளமை, இவற்றிற்கு வழங்கும் பெயர்களாலேயே தெரிகின்றது. நாம் வாழும் உலகமோ 'கலக்குண்டாகும் புவி.' பல்வேறு கலகத்தையே உண்டாக்குவது; இறைவனை இறைஞ்சுவதற்கென ஏகதேசத்தில் உண்டாகும் தெளிவையும் பாழாக்கி உலக நிலையிலேயே உழலச் செய்யும் கல(க்)க நிலையே உண்டாக்குவது. இதில் நாம் ஆழ்ந்துள்ளது "யாதும் நிலையற்று அலையும் எழு பிறவிக் கடல்." இவ்வாறு பவ சாகரத்துள் ஆழ்ந்து எழாது நிசமானது எனப் பல பேசி அதனூடே நெடுநாளும் உழைப்புளதாகி வாழும் நிலையற்ற வாழ்வு படுமோசமானது. காரணம், இதனால் பெறுவது 'அவலக் கவலை, கையாறு, அழுங்கல், தவலா உள்ளமே.' இவ்வாறான புத்திக் கிலேசமும் காயக் கிலேசமும் போக்கி இந்தச் சடலமுடன் (உடலுடன்) உயிர் நிலைபெறுமாறு உள்ள உபாயம் எது வென்னில், செவ்வேட் பரமன் திருவுருவை அரை நிமிஷ நேரமட்டில் தவமுறை தியானம் வைத்தல், நின்று சேவித்தல், தண்டைச் சிற்றடியை வந்தித்தல், அவனது திரு அருட் பெருமையைப் பாடி சித்தமு மனமு முருகிட தினமும் வாழ்த்துதல் முதலியன. இவற்றால் மயில் வாகனப் பெருமான் தனது மகிமை சேர் காட்சியை வழங்கியருள் புரிவான். அவனது அருள்விழி நின்றுற்றிடவே நிலையழி கவலைகள் நெடுந்தொலைவில் கால்வாங்கி ஓடும். பின்னர் பெறுவது இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற பெரு நிலையேயாகும்.

எனவே, பெரும் பேரின்ப நிலைக்கு இடையூறாக இருப்பவை உடலுறு துயரும் உள்ளத்துறு துயருமேயாம். இவற்றைப் போக்கி துன்பங் கலக்காத இன்பநிலை யுதவவே

---

**கதிதருவான் என்றபல கண்ணியர்சொல் கேளாத**
**ஓதிமரம் என்பாவம் ஒழிவதுவும் என்றேயோ**

இலேவேலண்ணல் ஆறுபடை வீட்டில் அமர்ந்தருளினன் என்க.

உடலுறுதுயர்

"காயக்கிலேசம்" எனப்படும் உடலுறு துயரை ஒழிப்பதே முதற் படை வீடாகிய திருப்பரங்குன்றமாகும். பரம் என்றால் உடல். ஈண்டு ஆகுபெயராய் பிறப்பு இறப்பு என்பவற்றை உணர்த்திற்று. அது - குன்றுதல் என்பது குறைதல்-அதாவது உடலுறு துயரைக் குறைப்பது. இந்தப் படை வீட்டைத் தரிசிக்க, வாழ்த்த, தியானிக்க சனன மரணத் துயர் தவிர்ந்துபோம் என்றறிக.

ஆசை முதலிய பந்தங்களே பிறவிப் பெருந் துயர்க்குக் காரணமாகும். அதனை நீக்குமாறு திருப்பரங்குன்றத்துச் சேயவனிடம் அருணகிரி யண்ணலின்,

"சந்ததம் பந்தத்—தொடராலே
சஞ்சலம் துஞ்சித்—திரியாதே
கந்தன் என்றென்றுற்—றுனைநாளும்
கண்டுகொண்டன்புற்—றிடுவேனோ
..............................................
தென்பரங் குன்றின்—பெருமாளே"

எனவும்,

[எப்போதும் பந்தபாசத்தாலே ஓயாத் துயருற்று உழலாமல் கந்தனென்று என்று பன்முறை பாடி உன்னைச் சிந்தித்துத் தினமும் உள்ளக் கண்ணால் நோக்கி உவகை கொள்ளேனோ."]

"பல துன்பமுழன்று கலங்கிய சிறியன் புலையன் கொலையன்புரி
பவமின்று கழிந்திட வந்தருள்—புரிவாயே
வளமொன்று பரங்கிரி வந்தருள்—பெருமாளே"

எனவும்,

"இனல்படும் தொந்தவாரி—கரையேற
இசைதகிடும் சந்தபேதம்
ஒலித்திடும் தண்டை சூழும்
இணைப்பத புண்டரீகம்—அருள்வாயே
..............................................
திருப்பரங்குன்றமேவும்—பெருமாளே"

---

எம்பெருமான் தாள் தியானம் ஏத்துபுகழ் எல்லாமே
எம்பரமே எனும்வாதம் இடிவதும் என்றேயோ

விண்ணப்பங்களை உன்னுக. ஆதலால் திருப்பரங்குன்று உறையும் சேயவனைத் தியானிக்க உடலுறு துயராம் பிறவிப் பிணி ஒழியும் என்றறிந்தோம். திருப்பரங்குன்றம் உடலுக்கு உறுதி தரும் தலம் என்க. இனி உடலைவிட உயர்ந்தது உயிர். ஆகையால் உயிருக்கு உறுதி தரும் படை வீடுகள் இரண்டாக அமைந்துள்ளன. அவைதாம் திருச்செந்தூர், திருஆவினன்குடி என்பன. அவற்றின் சிறப்பையும் பொருந்தும் வகைகளையும் அடுத்த இதழில் ஆராய்வோம்.

---

ஸ்ரீ தேவிதாஸர்கள் 16

# மங்கள கருணாகரர்

(ஸ்ரீரஸபதி)

தெய்வ வளத்தது திரிசிரபுரம். பரமன் கோயில் நோக்கி, அங்குப் படியேறுகின்றனர் பலர். ஏறும்போது சிரமமாக இருக்கிறது. உச்சியில் சென்றதும், உடல் பாரம் குறைந்தது போல் தோன்றுகிறது. குளிர்ந்த காற்று குதூகலம் விளைவிக்க, பட்ட சிரமம் பறக்கின்றது

ஆ! என்ன இன்பம்! உவகை அடைகிறது உள்ளம். அங்கிருந்து கீழ் நோக்கினால், மாபெரும் மாளிகைகள் யாவும் மட்டரகமாகத் தோன்றுகின்றன; எறும்புகள் ஊர்வதுபோல் மக்கள் போகின்றார் வருகின்றார்.

மெய்ப்பொருள் சந்நிதியை மேவினோம். இனி, உவர்க்கும் வாழ்க்கை ஒழிந்தது. 'என்ன குறையும் இலோம்' எனும் இறுமாப்பை யடைகிறது இதயம். கம்பன் ஆலயத்தில் ஆராதனை நடைபெறுகின்றது. அரஹர என்ற அன்பர்கள் ஒலி, செவியில் பாய்ந்து சிந்தையுள் புகுந்து, எவரையும் சிவமாக்கி விடுகிறது.

'தொழுதகை தலைமேல் ஏற, அரும்பு கண்ணீருள் மூழ்கி'; தாயுமானவர் சந்நிதியில் கதறுகின்றார் அன்பர் கருணாகரர். மங்களம் என்னும் பெயருடைய அவர் மனைவி, அம்பிகை திருமுன் வகையாக வீழ்ந்து வணங்குகிறாள்.

---

செம்பொன்மலை வில்லானைச் சிந்தித்து வந்தித்தே
வம்பும் தும்பும் தீர்ந்து வாழ்வதும் என்றேயோ

அம்பா! அனைத்துலகும் ஆனாய்! உயிர்களின் குறைகளை உணர்கின்றாய்! நினைவில் நிறைவு தா தேவி! தேவ தேவி என்று புகழ்ந்து போற்றிப் பொருமினள்.

அதோ கருணாகரர் புறப்பட்டு விட்டார். திரும்பிப் பார்த்த மங்களம், அவரைப் பின் தொடர்ந்தாள் மலையி லிருந்து இறங்கினர். தம் மாளிகை யடைந்தனர்.

கருணாகரா, திரிசிரபுரத்தில் உள்ள பெருஞ்செல்வப் பிரபுக்களில் ஒருவர். அவர் துணைவி, குணம் சிறந்த கோதை. பரம தேவி பக்தை. அவள் புறமனம், கணவரைப் பூசித்தது. அக மனம், அமலையை ஆராதித்தது.

புனித அவளை மணந்த புண்ணியத்தால், கருணாகரர்க்கு, வர்த்தகத்தில், கை வைத்த இடமெல்லாம் தங்கம். கால் வைத்த இடமெல்லாம் வாழ்வு.

இவ்வளவு பேறு இருந்தும், குடும்பத்தை மகிழ்விக்கக் குழந்தை யில்லை. இந்த ஏக்கம், அவர்க்குப் பல நாளாக இருந்தது. இது குறித்து, இறைவன் திருமுன், அவர் ஒரு நாளும் முறை யிட்டது இல்லை. அப்படிப் பிரார்த்திப்பது, மட்டரகம என்பது மங்களத்தின் மன நிலை. அதனால், இதயத்தில் நினைவு இருந்தாலும், வாய் திறந்திலா கருணாகரர்.

மங்களம்! இன்ப மக்கள் பேறு இல்லாதவர்கள் நாம். இருக்கும் செல்வம், எதிர் காலத்தில் என்ன ஆகுமோ? என்று சொல்லிக் கொண்டே கண் கலங்கினர் ஒருநாள் கருணாகரர்.

ஸ்வாமி! தேடிய பொருளைக் கொண்டு, அன்று மேலோர் தெய்வக் கோயில் அமைத்தனர். வழிபாட்டுக்கென்று, நிலபுலம் வாங்கினர் அன்றைய மனநிலையில், இன்றும் சிலர் இருக்கின்றார்.

நாம் சேய்கள். தற்பரி நமையளித்த தாய். தேவியின் சேய்களான நாம், எங்கட்கு மகவு தா என்று விமலையை வேண்டுவது, விபரீத ஆகாமிய விளைவு. அருள் நிலையத்தை, அம்மை யப்பா! என்று அழைப்பவர்கள நாம். அம்மையே அப்பா! என்று நமை யழைக்க, வேறு சேய்கள் நமக்கு வேண்டுமா? பிறப்பாரைத் தடுக்க, நாம் யார? அதுபோல, இல்லையே பிளளைகள் என்று ஏங்க, நமக்கு என்ன உரிமை யிருக்கிறது?

சர்வ ஜீவ தயாபரி, அளவிலாத உயிர்களின் அன்னை. தந்தை யான பரமன, இக்குத தாயுமானவன் ஆயினன். அளவிலாத செல்

---

மெய்யில்மெய் யாய்விளங்கும் வேதியனைப் போற்ருமல்
பொய்யில் உழன்றபவம் பொய்ப்பதுவும் என்றேயோ

வத்தை, நமக்கு அளித்தது தேவி அருள். ஆதலின், பொருளை, முதல்வியின் சந்நிதியில் ஒப்படைப்பதே முறை.

சபாஷ் மங்களம்! சரியான யோசனை. நம் செல்வம் அனைத்தையும், இன்றே தாயுமானூர் கோயிலுக்கு எழுதி வைக்கிறேன் என்றார் கருணாகரர். செயலிலும், சொன்னபடியே செய்தார். இரண்டு மாதங்கள், இடையில் உருண்டு ஓடின.

திரிசிர புரத்தில் இருந்தால், ஆலயத்திற்கு என்று அளித்த செல்வம், நம்ம தென்ற நினைவு ஒரு நாளேனும் வரும் ஆதலின், புனித க்ஷேத்ர யாத்திரை யென்று புறப்படுவம். அம்பிகை, நமக்கு அருள பாலிப்பள என்றாள் மங்களம்.

அறிவுடைய அவள் மொழிகளை, கருணாகரர் ஆமோதித்தார். இருவரும் ஒருநாள் புறப்பட்டனர். செல்லும் இடமெல்லாம், சிவ சிவ சிவ என்று, முறையே கருணாகரர் வாய் முணுமுணுத்தது.

இதயத்தில் அம்பிகையை எண்ணி, மனங் கசிந்து சென்றாள் மங்களம்.

திருத்தருப் பூண்டிக்கு, வில்வ ஆரண்யம் என்றும் பெயர் உண்டு. அப்பதியில், உயர்ந்த பொய்கைகள் ஒன்பது. தம்பதிகள், அத் தலத்தை யடைந்தனர். நியதியொடு பொய்கைகளில் நீராடினர். அனுட்டித்தனர்.

அத்தலத்தில் எழுந்தருளிய இஷ்டசித்தி விநாயகரை, கருணாகரர் ஏத்தினர். மருந்தீசரை வணங்கினர். தீர்த்த விடங்கத் தியாகரை இறைஞ்சினர். சபாநாயகரைத் துதித்தார்.

கணவருடன் மனம் கனிந்து தொழுது வந்த மங்களம், பெரிய நாயகியின் மேலான சந்நிதியில, மெய்ம மறந்தாள. சிவகாமி திருமுன், இன்பக் கண்ணீரை இறைத்தாள்.

இருவர் மனத்தையும், காந்தம்போல் அத்தலம் கவர்ந்தது. மற்றொரு தலம் செல்ல, கால்கள மறுத்தன.

மனோலயம் தந்த அத்தலத்தில், என்றும் இருப்பது என்று எண்ணினர். பிரம தீர்த்தத்தின் வடகரையில், அழகாக ஒரு சிறு குடில் அமைத்தனர். மாபெரும் மாளிகையில் வாழ்ந்த தம்பதிகள், இன்று குதூகலத்தோடு அதில் குடியேறினர்.

பயனுள காய்கறிகளைப் பயிரிட்டனர். விலை கூறி அவைகளை விற்றனர். இப்படி, நல்ல வழியில் குடும்பம் நடந்தது.

காலை எழுவது, கடனை முடிப்பது; நீராடுவது; நெற்றிக்கும் நீறுடுவது; கோயிலில் செல்வது; வழிபாடு செய்வது; உணவிற்கு முயல்பது; உண்பது; உறங்குவது. சில நாள்கள் இப்படியே சென்றன.

---

**பையரவம் பூண்டான்றன் பாதச் சிலம்பொலியை**
**மெய்யாகக் கேட்டடியேன் மேன்மைபெறல் என்றேயோ**

மங்களம்! பொழுது இப்படியே போகலாமா? ஏதாயினும் ஒரு சிறந்த பணியைச் செய்ய வேண்டும். என்ன செய்யலாம்? யோசித்துச் சொல்!

ஸ்வாமி! அரிய ஒரு நந்தவனம் அமைப்போம். மலர் பறிப்போம். ஆலயத்தில் அளிப்போம். இது பயனுள்ள பணி என்றாள் மங்களம். அதுதான் சரி என்று ஆநந்தித்தார் கருணாகரர்.

அருகில் ஒரு நந்தவனம், திட்டப்படி அமைந்தது. பலவிதமான மலர்ச் செடிகள் பயிராயின. மனம்போல் பெருகிய மலர்கள், மனோரம்யமாய் மணம் கமழ்ந்தன.

பரிவு கொண்டு பறிப்பர். மாலை தொடுப்பர். குடலையுள் நிறைப்பர். கொண்டு போய்க் கோயிலில் கொடுப்பர். மாலையின் மணம் கண்டு, அர்ச்சகர்கள் மகிழ்வர். அமலனுக்கும் அம்பிகைக்கும் சூட்டுவர். கம்பீரமான சிவசிலை கோலம் கண்டு, தொழுது தம்பதிகள் துதிப்பர். புனிதமாக, இப்படிப் போகிறது பொழுது.

ஒருநாள், மற்ற மூர்த்திகட்கு மாலை சூட்டிய அர்ச்சகர், பெரிய ஒரு மாலையை, பெரிய நாயகிக்கு என்று எடுத்தார். கைகள் நடுங்கின. அடடா! என்ன செய்தி? மாலையில் ஒரு மயிர். கண்ட குருக்கள், கடுங்கோபம் கொண்டார்.

கருணாகரரே! என்ன அக்ரமம்! இது அநுசிதம் என்று, வேறிடத்தில் மாலையை வீசினார்.

கண்ட கருணாகரர் கலங்கினார். பேதை மங்களத்தால் வந்த பிழை. ஆம். அப்படித்தான் இருக்க வேண்டும். கண்கள் கலங்கின. இதயம் இடிந்தது. தகுதி யுடைய அவர் கால்கள் தடுமாறின.

என்ன அமங்கலம் இது! என்று, பாவை மங்களத்தின் இதயமும் படபடத்தது.

ஒருவரை ஒருவர் நோக்கிலர் வாய் மூடி வந்தனர். குடிசையுள் புகுந்தனர். குமுறியது மனம்.

மறுநாள் காலை, புனித கருணாகரர் நந்தவனம் நோக்கிப் புறப்பட்டார். வழக்கப்படி மங்களம் தொடர்ந்தாள்.

எங்கே வருகிறாய்? நில்! மாலை தொடுக்கும் பணியை, இனி நீ மறந்துவிட வேண்டும். நீர் பாய்ச்சு! அது போதும் என்று, கடுமையாக எச்சரித்தார் கருணாகரர்.

அம்பிகைக்கு மட்டும் அடியாள் தொடுக்கிறேன்!

கூடவே கூடாது என்று குமுறி வந்தது பதில்

என்ன செய்வது என்று தோன்றவில்லை. ஏமாந்தது இதயம். தாயே! பெரிய நாயகி! மாலை கட்டாதபடி என்னை மேலும் மறுப்

---

ஆரும் அறியாதபடி அத்தன் வந்தே யென்னை
சேரும் திருவிழா சேவிப்ப தென்றேயோ

பாயோ அம்பா! அம்பா என்று அழுதது அவள் அகம். கட்டளைப் படி, நந்தவனத்திற்குத் தண்ணீர் பாய்ச்சினள்; அதனோடு தன் கண்ணீரும் பாய்ச்சினள், அதை அவள் கணவர் அறியார்.

தானே தொடுத்த மாலைகளுடன், அன்று கருணாகரர், கம்பன் ஆலயம் நோக்கி நடந்தார். மனம் வருந்தித் தொடர்ந்தாள் மங்களம்.

குடலையை நான் எடுத்து வருகிறேன். என்னிடம் கொடுங்கள்.

கூடாது! அதை நீ தொடவே கூடாது!

ஏன் இப்படி எரிந்து விழுகிறீர்கள்? என்ன அபசாரம் செய்தேன் நான்?

பதிலே யில்லை. போய்க் கொண்டே யிருக்கிறார்.

நான் தொடாத மாலையை, எம்பிராட்டி தான் தொடவே மாட்டாள்! கொடும்! இப்படிக் கொடும் என்று மடக்கி யழுது மறியல் செய்தாள்.

முடியவே முடியாது! குடலையை நீ தொடவே கூடாது என்று, விறு விறுத்து கருணாகரர் வேகமாக நடந்தார.

அவ்வளவு பாவியா நான்? என்று, அலமந்து தொடர்ந்தாள்.

ஆலயததை இருவரும் அடைந்தனர். மாலைகளை, கருணாகரர் ஒவ்வொன்றாக எடுத்தா. அர்ச்சகரிடம் கொடுத்தார்.

அவைகளை முறையே அர்ச்சகர், வில்வபுரீசர்க்குச் சூட்டினார். தீர்த்த விடங்கர்க்குச் சாத்தினார். ஆடல் அரசர்க்கும் அணிந்தார். பெரியநாயகிக்கு, உரிய மாலையை எடுத்தா. ஆ! என்ன இது என்று அலறினார்.

என்ன ஸ்வாமி! என்ன செய்தி?

என்ன ஐயா இது? மாலையில் நாலைந்து மயிர் இருக்கிறதே! நானும் பார்க்கிறேன்; வரவர அஜாக்கிரதையாக நடந்து கொள்கிறீர். அம்பிகைக்கு இதை அணியவே கூடாது!

என்ன அதிசயம்! அருகில் மங்களததை அணுக விடவில்லையே! கண்ணும் கருத்துமாக அல்லவா கட்டினேம். இதனில் ரோமம் எப்படி வந்தது? கவலை வளர்ந்தது. நாணித் தலை குனிந்து நடநதார். மங்களம் தொடர்ந்தாள். இருவரும் இல்லம் எய்தினர்.

நான் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டேனே! கடும் கோபம் காட்டிக் காதுகொடுக்க மறுத்தீர்களே! பேரருள் நிறைந்த பெரிய நாயகி, மங்களம் தொடுத்த மாலையென்று மறுக்கமாட்டாளே! நான் தொடுத்திருந்தால், மாலையில் அமங்களம் வாராது! மனம்

---

வேர்பிளந்து வீழும் மரம்போல்நான் வீழுமுனே
தார்பிறங்கு மார்பினன் தான்வருதல் என்றேயோ

கொந்த இந்த ஏழை மொழியை நீர் மறுத்ததால், நேற்றும் இன்றும், மாபெரும் தேவி, தனக்கு மாலை வேண்டாமென்று மறுத்தாளோ? என்னவோ ஒன்றுமே தோன்றவில்லையே! அநியாயம்! இது அநியாயம் என்று மங்களம் அலறினாள்.

மங்களத்தின் வார்த்தைகளால், மயங்கியது மனம். தேவிக்கு மட்டும், நாளைய மாலையை, கண்ணும் கருத்துமாகக் கட்டிக் கொடு. மற்ற மாலைகளை நான் தொடுக்கிறேன் என்றார்.

மகிழ்ந்தது மங்களத்தின் மனம். மறுநாள் அவள் தொடுத்த மாலையில், எந்தக் குற்றமும் இல்லை. மாலை யணிந்த கோலத்தில், பெரியநாயகி, கம்பீரமாகக் காட்சி யளிக்கிறாள். கண்ட கருணாகரர், தேவியைக் கைகுவித்துத் தொழுதார்.

அன்று முதல், மங்களம் தொடுக்கும் நாளில், அம்பிகை சந்நிதி, கமகமவென்று மணம் கமழ்ந்தது; மாபெரும் பக்தர்கட்கெல்லாம் மனோலயத்தைத் தந்தது. கருணாகரர் தொடுக்கும் நாள்களில், ஏதேனும் ஒரு குறை இருந்தது; புனித தேவியின் தோற்றம், பொலிவா யிருப்பதில்லை. காரணம் அறியாமல், கருணாகரர் கலங்கினார். மங்களத்தின் மாலையில் மட்டும், மணம் பெருகக் காரணம் என்? வரவர ஐயம் வளர்ந்தது. என்னதான் செய்கிறாள்? எப்படி அமைக்கிறாள்? இதைச் சோதிக்கவேண்டும் என்று, தூய அவர் இதயம் துணிந்தது.

ஒருநாள், இருவரும் மலர் பறித்துக் குவித்தனர். மங்களம்! நீ கட்டவேண்டிய மாலையைக் கட்டிவை! விரைவில் திரும்பி வருகிறேன் என்று, வீட்டை விட்டு வெளியேறினார். போக்கு அப்படிக் காட்டினாரே தவிர, அவர் எங்கும் போய்விடவில்லை. திரும்பி வந்தார். ஒளிந்து இருந்தார். கருத்தொடு மங்களம், மாலை தொடுப்பதைக் கவனித்தார்.

தன் அளவிற்குத் திட்டமாகக் கட்டிய மாலை கனைக்கா யிருந்தது. ஆவலொடு தானே அணிந்தாள். நிலைக்கண்ணாடி எதிரில் நின்றாள். அழகாக இருந்தது. புன்னகை முகத்தில் பொலிந்தது. இது, எங்கள் பெரியநாயகிக்கு ஏற்றது என்று எடுத்தாள். குடலையுள் வைத்தாள். குதூகலப்பட்டாள்.

கருணாகரர் இச் செயலைக் கண்டார். அவர் இதயம் அதிர்ந்தது. கண்கள் சிவந்தன. பற்களைக் கடித்தார். பதைத்து எழுந்தார்.

அடி பாவி! அடுக்குமா இச் செயல்? இந்த அநாசாரத்தை எப்படிச் சகிப்பாள் அம்பிகை? ஐயோ! ஐயோ என்று துடியாத்

---

இருட்டை அகம்பரப்பும் என்மலந்தான் தேயக்
குருட்டுநெறி நீங்கிக் குணம்பெறுதல் என்றேயோ.

துடித்தார். குடலையைத் தூக்கினர். மாலையைக் குப்புறக் கொட்டினர்.

வேண்டாம்! ஐயோ கொட்டாதீர்கள்! எடுப்பான மாலை. விமலதேவி இதை விரும்புவாள்! அமலைக்கு இதை அணியுங்கள்! அதன்பின் தெரியும் அருமை என்று, பல சொல்லி வேண்டினள் அப் பாவை.

பேசாதே! வாயை மூடு என்று ஆத்திரமாகக் கருணாகரர் அலறினர். அன்று புழுங்கிய மனத்துடன், தற்பரிக்கென்று மாலை தன் கையால் தொடுத்தார். அதை, பிறகு கட்டிய சிறந்த மாலை களுடன் சேர்த்தார். சந்நிதியில் விநயமொடு சமர்ப்பித்தார். அன்று, மருந்தீசர் முதலிய மூர்த்தங்களில, மாலை மணம் கமழ்ந்தது.

என்ன வியப்பு! தேவிக்கு உரிய மாலையில் மட்டும், கொத்துக் கொத்தாக மயிர்.

அர்ச்சகர் அதை அறிந்தார். அதைத் தொடவே அவர்க்கு அருவறுப்பாக இருந்தது. வீதியில் கொணர்ந்தார். வீசியெறிந்தார். பயந்து பயந்து கட்டிய மாலையில், எப்படி வந்தது பழுது? கருணாகரர் கலங்கினர். கண்ணீர் வடித்தார். அதே நேரத்தில், மங்களம் வேகமாக வந்தாள் அவள் கையிலும் ஒரு குடலை. இனிய ஒரு மாலையை, அதிலிருந்து எடுத்தாள்.

உண்மைதான். அம்மாலையின் தொடுப்பே அழகா யிருந்தது. அதை வாங்கிய குருக்கள, வாமைக்குச் சூட்டினர். தத்ருபமாகச் சேவை தருவதுபோல் திகழ்கிறது, விருத்தாம்பிகையின் திரு வுருவம். கண்ட அர்ச்சகர் கை குவித்தார்.

மங்களத்தைக் கண்டதும் தலை குனிந்த கருணாகரர், பரசிவை யின் தோற்றத்தைப் பரிந்த மனத்தோடு பார்த்திலர். கொண்டு வந்த மாலையைக் கொடுத்ததையும், அர்ச்சகர் உடனே அதை அணிந்ததையும், வேகததில் அறிந்தார். கோபத்தால் கொதித்தார்.

அடி துரோகி! நீ சூடிய மாலையையா தேவிக்குச் சூட்டினை! பாதகம்! அதி பாதகம்!! இனி உன் உறவே வேண்டாம்! தொலைந்துபோ! என்னைத் தொடராதே என்று, நடுங்கிய மனத் தொடு நடந்தார்.

ஐயோ! தேவீ! இது என்ன சோதனை! விருத்தாம்பிகே! அம்பா! என்று அலறி விழுந்து மூர்ச்சிததாள் மங்களம்.

கருணாகரா! போகாதே! நில்! என்று, மோகனம் செய்யும் குழலிசை போல், எழுந்தது ஒரு குரல்.

---

இருள் தபுக்கும் எந்தை யிணையடியை எண்ணுமல்
புருடவேடத் தேனென்றன் பொய்ம்மைகெட லென்றேயோ

யார் அது? என்று திடுக்கிட்டுக் கருணாகரர் திரும்பினார். மங்களம் மகா புனிதை. அவள் இதய பீடத்தில் நான் இருக்கிறேன். மாலை கட்டும் போதெல்லாம், தன்னை யளப்பாளபோல், அவள் என்னை யளந்தாள. மாலையைத் தனக்குச் சூட்டுவாள்போல், எனக்குச் சூட்டினாள். நிலைக்கண்ணாடி எதிரில் நின்று, தன்னழகு காண்பாள் போல, என்னழகை எதிர்கண்டாள சந்நிதியில் மாலையைச் சமர்ப்பிக்கும் போதும், தன் இதய உணர்வை அதில் வைதது தருகிறாள. அவள் சூடிக் கொடுத்த சுடர்க்கொடி. அவள் அன்பொடு கொணரும் மாலையில், ஆர்வம் எனக்கு அதிகரிக்கின்றது. இவைகளை உணராமல், இனிய அவளை நிந்திப்பது, எம்மை நிந்திப்பதாகும். இது என்றும் உன் நினைவில் இருக்க வேண்டும்!

அறியாமைத் திரை அகன்றது. மகிழ்ந்து இதயம் மலர்ந்தது. எங்கிருந்து எழுகிறது இக் குரல் என்று, நயந்த மனக கருணாகரர், அப்படியும் இப்படியும் பார்த்து அங்கலாய்க்கிறார். பசுமை ஒளி பளபளக்க, புன்னகை திருமுகததில பொலிய, அபயவரத கரங்களுடன், தற்பரி பெரியநாயகி தரிசனம் ஆயினாள். ஒளிநிழல் பட்டதும், மங்களம் உயிர்ததாள். கண்கள் திறந்தாள். ககன தேவியை, இருவரும் கண் பெற்ற பயனென்னக் கண்டனர். தம்வசம் கெட்டனர். பரவசப் பட்டனர்.

தற்பரீ! சிற்பரீ! நாத நலத்தால் போதம் தந்தனை. நேர் காட்சி தந்து நிறைவும் தந்தாய்! வாழ்க தேவீ உன் திருவருள்! என்று, அழுது தொழுது, கருணாகரர் ஆநந்தித்தார்.

ஜகதாம்பிகே! தாயே! எளிய எங்கட்கு இரக்கம் காட்டி, சேவை தந்த உன் பெருங் கருணையை, மறக்க முடியுமோ அம்பா! அம்பா என்று மங்களம், ஆனந்தக் கண்ணீரால் தேவி திருவடிகளை அபிஷேகித்தாள்.

மங்களம்! உன்னால் உன் கணவன் உயர்ந்தான். வாழும் அவன் தொடர்பால், நீ வழிமுறை யறிநது வளர்ந்தாய். இருவரும் மீண்டும் இளமை எய்தி, நல்லற இல்லறம் நடத்தி, மாநிலம் போற்றும் மகப்பேறு கொண்டு, இறுதியில் நம் பதம் எய்துவீராக! என்று அருளி, உருக்கரந்தாள் உமாதேவி.

என்ன வியப்பு! இருவரும் அப்போதே இளமை எய்தினர். அங்கு இருந்தோர், இநத அதிசயங் கண்டனா. மாபெரும் தேவியை மகிழ்ந்து போற்றினர். அவ்வளவுதான்!

---

ஊனாய் உயிர்ப்பொருளாய் ஓங்காரன் எங்குமுளன்
நானு வலிந்தவனை நயப்படுத்தல் என்றேயோ

பெரியநாயகியின் சேவையை நாங்கள் பெறவில்லை யாயினும், அன்பிற் சிறந்த உங்களால், செழுமிய தேவியின் குரல் கேட்டோம். வாழ்க நீங்கள் என்றும் வாழ்த்தி வணங்கினர்.

மங்கள கருணாகரத் தம்பதிகள், அன்றுமுதல், பெரியநாயகி! பெரியநாயகி! என்று இடையறாது உருவேற்றி யிருந்தனர் பழைய படியே, சிறந்த மாலைத் தொண்டு செய்தனர். வாழ்க்கையில், பேரழகுடைய பிள்ளை ஒன்று பிறந்தது.

விருத்தராகி இருந்தோம். இடையில் குமர குமரிகளாயினோம். பாலன் ஒருவனையும் பயந்தோம். எம்பிராட்டி திருவருள் உதவினால், எந்த அதிசயந்தான் நிகழாது? என்று, இருவரும் போற்றி இறைவியைப் புகழ்ந்தனர். பிறந்த பிள்ளைக்கு, ஞானகரன் என்று பெயரிட்டனர்.

வரவர செலவு வளர்ந்தது. வாட்டி வருத்தியது வறுமை. இதுவும் தேவியருள என்று, இன்பம் கொண்டு தம்பதிகள் இருந்தனர்.

வீட்டின் பின்புறத்தில் ஒரு கிணறு. வற்றியது நீர் என்று, அதிலிருந்த சேற்றை இருவரும் வாரினர். சில நேரத்திற்குள், அதிலிருந்து, அதிசயமாகப் புதையல் ஒன்று அகப்பட்டது. அதில் ஏராளமான தங்க நாணயம்.

என்ன ஆச்சரியம்! இதுவும் தேவி கிருபை என்று மனம் எண்ணியது.

"மலடி வயிற்று மகன்போலே—ஒரு
புதையல் எடுத்த தனம்போலே"

என்ற பாடல், புனித இவ்வரலாற்றோடு பொருந்துகிறது அல்லவா!

அதன்பின், வீடு நிலபுலம் விருத்தியாயிற்று. வித்தையில் விருத்தி பெற்ற ஞானகரனுக்கு, காலத்தில் மணம செய்து களித்தனர். பேரன் பேத்தியர் பெருகினர். தீர்த்தாம்பிகையை வாழ்நாள் முழுதும் வழுத்தி, இம்மை இன்பம் கண்டிருந்த தம்பதிகள், நல்ல ஒரு சுபதினத்தில், பெரியநாயகியார் திருவடி நிழலில் பேரின்பம் கொண்டனர்.

வாழ்க தேவிதாஸர்கள் !

---

வானோர் தொழவிடைமேல் வந்தருளும் மெய்ப்பொருளை
நானோர்ந்து நான்கெட்டு நண்ணுவதும் என்றேயோ

திருவண்ணுமலையில்


ஸ்ரீ அருணகிரிநாத ஸ்வாமிகள்

# தெய்வப் பெருந் திருவிழா

மூன்ருவது ஆண்டு (15-8-57) வியாழக்கிழமை

வாருமே பெருத்த பாருளீர் !

நாடு விடுதலை பெற்ற ஆகஸ்டு பதினைந்தாம் நாள் காலை, நினைக்க முத்திதரும் திருவண்ணுமலையில், அகில உலகிற்கும் அமைதியை விரும்பி, மங்கள நாதஸ்வர இன்னிசையும், திருப்புகழ் நாத பாராயணமும் திகழ, ஸ்ரீ அருண



கிரிநாதர் அருமைப் பெருந் திருவிழா ஆரம்பம் ஆகும். அன்று பகல், கம்பத்திளையனர் சந்நிதியில் மெய்ப் பொருள் சிந்தனை விரிவுரையும், மாலை 6 மணிக்கு, பல தலங்களில் உள்ள தேவார திருப்புகழ் திவ்யப்ர பந்த கோஷ்டியினர் முன்னும் பின்னும் நாதம் முழக்க, ஸ்ரீ அருணகிரிநாத ஸ்வாமிகள் திருவுலாக் காட்சி இனிது நிகழ்வுறும். பல ஸ்தலங்களில் அன்பொடு வாழும் அடியார்களை, ஓரிடத்தில் ஏக காலத்தில் சேவிக்கும் இந்த அருமை வாய்ப்பு, திருவருள் துணையால் பிரதி ஆண்டும் நிகழ்கிறது.

சேர வாரும் ஜகத்தீரே !

---

மின்னலெனும் வாழ்க்கைதனை மெய்யென்றே நம்பி
பொன்பொருளைத் தேடும் புலையொழிவ தென்றேயோ

பெரிய புராணச் சித்திர விளக்கம்—40

# திருஞானசம்பந்தர் திருமணம்

(சேக்கிழார் அடியன்)

எமது பெருந்தகை திருஞானசம்பந்தர் சீகாழியில் எழுந்தருளி யிருந்தபோது, சிவபாத இருதயரும் மற்றையோரும் ஒரு நாள் வந்து அவரை வணங்கினர். வைதிகம் தழைத்து வளர, எம்பொருட்டுத் தேவரீர் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று விநயமொடு வேண்டினர். எங்கள் பிள்ளையார், அதற்கு அரிது இசைந்து அருளினர்.

உடனே திருநல்லூரில் அந்தணர் குல தீபமாக விளங்கிய நம் பாண்டார் நம்பிகளது திருமகளாரை, மணம் பேசி முடிவுசெய்தனர். முகூர்த்த நாள் வைத்தனர் பிள்ளை வீட்டாரும் பெண் வீட்டவரும் திருமணத்திற்குச் செய்யவேண்டிய செயலனைத்தும் செய்தனர். சமாவர்த்தனம்—இரட்சாபந்தனம்—நித்திய கருமம் முதலியன நிகழ்த்தினர்.

அடியார் புடைசூழ, திருஞானசம்பந்தர் திருப்பல்லக்கில் அமர்ந்து திருநல்லூர்க்குச் சென்றார். அங்குத் திருப்பெருமணம் என்று பெயர்பெற்ற புனித சிவாலயத்திற் புகுந்தார். பரமனைப் பணிந்து திருப்பதிகம் பாடினர். விமலன் ஆலயத்திலிருந்து வீதிக்கு வந்தார். மணக்கோலம் புனைய, புறத்தில் இருந்த ஒரு திருமடத்தில் புகுந்தார்.

அந்தணர்கள், நியதியொடு திருமஞ்சன நீராட்டினர். உயர்ந்த வெண் பட்டாடை உடுத்தி, மேல் உத்தரியம் சாத்தினர். தூய முத்துக்களால் ஆன அணிகள பல அணிந்தனா. பிறகு பிள்ளையார் உருத்திராக்க மாலையையும் திருநீற்றையும் தாமே எடுத்துத் தரித்தார். உவகை தரும் ஐந்தெழுத்தை உச்சரித்து மகிழ்ந்தார். புனித அப் பொலிவுடன், வலம்செய்த திருவீதியில் வந்தார். இனிய முத்துச் சிவிகையில ஏறினர் வாத்தியங்கள் முழங்கின. வானவர் மலர்மழை பெய்தனர். பிராம்மணாகள் சிறக்க வேத கோஷம்

---

உன்னியுமை பாகன்தாள் ஒன்றும் பிறவியற
வன்னிவள நாதனருள் வாய்ப்பதுவும் என்றேயோ

செய்தனர். முத்துச் சின்னங்கள், அவர் திரு நாமங்களை இனிது கூற எழுந்தருளி வந்தார்.

பூப்பந்தருக்குள் வந்ததும், ஏறிவந்த சிவிகையினின்றும் இறங்கினார். திருக் கல்யாண மண்டபத்துள் சென்றார். அங்கு அமைக்கப் பெற்றிருந்த அரிய இரதன ஆசனத்தின் மேல் அமர்ந்தார்.

நம்பாண்டார் நம்பி, தமது மனைவியார், பசுவின் பாலும் தூய நீரும் ஏந்திப் பின் வர, தாம் முன்வந்தார்.

ஞானத்தின் திருவுரு; நான்மறையின் தனித்துணை; வானத்தின் மிசையன்றி மண்ணில் வளா மதிக்கொழுந்து; தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார சீர் தொடுக்கும் கானத்தின் எழுபிறப்பு என்று, மங்கையர்க்கு அரசியாரும், பாண்டிநாட்டு மந்திரியாரும் காழியர் பெருமானை அன்று கண்களிப்பக் கண்டார்கள. இன்று நம்பாண்டார் நம்பிகள், ஆளுடைய பிள்ளையாரை, பரம சிவமாகப் பார்த்தார். விததக மனைவியார், கமண்டலத்திலிருந்த நீரை விட, நம்பிகள், திருஞானசம்பந்தருடைய திருவடிகளை விளக்கினார். அத் தீர்த்தத்தைத் தமது சிரத்தின் மேல் தெளித்தார். உள்ளுக்கும் கொண்டார். பிள்ளையாருடைய திருக்கரத்தில் நீர் வார்த்து, தம் கோத்திரத்தைக் கூறி, தவம் செய்து பெற்றெடுத்த தனிமகளை, ஸ்ரீஜ்ஞான சம்பந்தப் பெருமானுக்குத் தந்தேன் என்றார்.

விவாக முகூர்த்தம் வர, மணமகளைக் கொண்டுவந்து, எங்கள் பிள்ளையார் பக்கத்தில் இருத்தினார்.

உடனே திருநீலநக்கநாயனார், தூய வேத விதிப்படி, சடங்குகளைத் தொடங்கினார்.

வேத ஒலி யெழுந்தது. மங்கலப் பறைகள முழங்கின. திருஞானசம்பந்தர், மனையாள் கழுத்தில் திரு மாங்கல்யம் சாதனினர். பாணிக்ரகணம் நடந்ததும், இருந்த பொரியை அக்னியில் இட்டார். சிவததைத் துதித்தார். சிதாக்கினியாவார் சிவபெருமானே என்ற எண்ணம் திருவுளத்தில் எழுந்தது. அங் கினியுடன், பூதாக்கினியை வலம் வந்தார்.

---

மூலமாய் எங்கும் முளைத்த முழுமுதலைக்
கால பாசம் கழலக் காண்பதுவும் என்றேயோ

அதன்பின் அனைவரும் தொடர, மனைவியாருடன் சிவபெருமான் திருக்கோயிலுக்குச் சென்றார். திருமணத்தைச் சேவிக்க வந்தவரை, கருணையொடு திருவுளத்தில் கருதினார்.

கல்லை ஊர்தல் ஆகிய அம்மி மிதிக்கும் கல்யாணம் வேண்டா! உன் பாதம் சேரும் பருவம் இது எனும் பொருள் தோன்ற, "கல்லூர்ப் பெருமணம் வேண்டா" எனும் அரிய ஒரு திருப்பதிகம் அருளினார்.

அப்பொழுது சிவபிரான், ஞானசம்பந்தா! நீயும், புனித உன் துணைவியான பூவையும், உனது திருமணத்தைச் சேவிக்க வந்த யாவரும், எமது இந்த அருட்ஜோதியுள் புகுந்து பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவீர்களாக என்று அருளி, திருக்கோயில் உள்படமேலோங்கிய சோதி வடிவாகி, அப்பேரொளியுள யாரும் புகுத, வாயில் ஒன்றை வகுத்துக் காட்டினார்.

களிமிகுத்து அதைக் கண்டதும், எவர்க்கும் ஞானமெய்ந்நெறி நமச்சிவாயவே எனும் பொருள் வெளிப்படையாகி விளங்கித் தோன்ற, "காதலாகி" எனும் திருப்பகத்தை அருளி, அங்கு உள்ள அனைவரையும் அருள நோக்கம் செய்து, ஈனமாம் பிறவி தீர, யாவரும் இப் பேரொளியில் பிரவேசியுங்கள் என்று திருவாய் மலர்ந்தார்.

பிள்ளையார் திருமணத்தைச் சேவித்துப் பாக்யசாலிகளான யாவரும், புனித அப்பேரொளியிற் புகுந்தனர். திருநீல நக்கர், முருக நாயனார், சிவபாத இருதயர், நம்பாண்டார் நம்பிகள், திருநீலகண்டப் பெரும்பாணர் முதலிய அடியார்கள், தங்கள் தங்கள் மனைவியருடன், சுற்றம் தொடர ஜோதியுள் கலந்தனர்.

சிவிகை முதலிய தாங்கினோரும், பணிகள் பல செய்தோரும், பரிஜனங்களும், அருமைப் பதினாறுயிர அடியவரும், பிற யாவரும் புகுந்த பின், பிள்ளையார் தம் துணைவியார் திருக்கரத்தைத் தம் திருக்கரத்தால் பற்றிக் கொண்டு, அந்த அருள் ஒளியை வலம் வந்து, போத நிலை முடிந்தவழி புகுந்து ஒன்றி உடனானர்.

---

ஆலத்தால் வானோர் அபயமென அன்றுதவும்
நீலகண்ட தேசிகன்தாள் நிழலடைவ தென்றேயோ

அதன் பின் மாபெரும் அந்தச் சோதி மறைக்க, திருப் பெரு மணமான திருக்கோயில் தோன்றியது. வானவர் முனிவர் யாவரும், இந்த அதிசயத்தைத் தூரத்தே கண்டு, கடிது விரைந்து அதில் கலந்து கொள்ளாது போனோமே என்று, வருந்தித் துதித்து வாழ்த்தினர்.

வளர் தமிழ்க் காழி மணி,
என்னுள்ளேயும் அறிவரும் அநந்த சிவமா, வதுவை
என்று பெயரிட்டு அழைத்து, அங்கு
இரும்புண்ட நீர்போல் திரும்பாத வீடுதரும்
இனிய கவுணியர் விளக்கே!

என்றும்,

கொள்ளை கொள்ள வீடுதவிக் கூற்றைப் பிடர்பிடித்துத்
தள்ளும் திருஞான சம்பந்தா!

என்றும்,

காழியிலே வந்து கணக்கிலாச் சிவமாய்,நீ(டு)
ஊழி பின்பத்து உய்த்த ஒருவனே!

என்றும், திருஞானசம்பந்தர் திருவுருவை இதயத்தில் வைத்து, போற்றி உலகம் புகழ்ந்தது.

---

# திருக்கழுக்குன்றத் திருக்காட்சி

சில வருஷங்களாக நடந்து வருவதுபோல் இந்த வருஷமும் ஜூன் 30 ஆம் தேதி திருக்கழுக்குன்றத்தில் திருப்படித் திருவிழா மிகவும் ஆனந்தமாக நடந்தேறியது. சிவனடியார்கள் பெருங் கூட்டமாகக் கூடியிருந்தனர்.

"கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

என்ற சேக்கிழார் வாக்கியத்தின் பொருளை நேராகக் காணப் பெற்றோம். பல்லாயிரம் ஜனங்கள் விடியற்காலையில் ஸ்நானம் செய்து நித்திய கருமாக்களை முடித்துக்கொண்டு விபூதி துலங்கும் நெற்றியும், திருமேனியும், ருத்ராட்சம் பொலிந்திடும் திருமார்பும், சிவாய நம ஓம், சிவாய நம ஓம்! சிவாய நம ஓம் நமசிவாயா என்ற பஞ்சாக்ஷர நாமாவளியை முதன்மையாகக்கொண்டு, இடை

பிடை தேவாரம், திருவாசகம், சித்தர்கள் வாக்கியம் பிரபந்தம் வேத உபநிஷத்துக்கள் சகித விளக்க உரையுடன் ஒரே கூட்டமாக சிவனடியார்கள் படியேறிச் சென்ற காக்ஷி, மறக்கற்பாலதன்று. திருப்புகழ்மணி ஐயாவர்கள் நாமாவளிகள் பாடவும், குஞ்சுமணி கூடவே பின் தொடர்ந்து இசை வாத்தியத்துடன் பாடி வந்ததும், நமசிவாய எனும் மந்திரத்தைப் பல மக்களும் கோஷித்ததும், அநுபவித்ததும் கண்கொள்ளாக் காட்சி. ஆண்டவன் தன் அருளையும் காட்டிவிட்டார். மோட்டார்காரில் திருப்புகழ்மணி வந்துகொண்டிருந்த சுமார் இருபத்தைந்தாவது மைலில், மோட்டார்கார் நின்றுவிட்டது. அப்பொழுது ஆண்டவன் அருளால் இரண்டு பஞ்சாபி அன்பர்கள், தாங்கள் வந்துகொண்டிருந்த வண்டியை நிறுத்தி, அலுவலையும் ஒத்திப்போட்டு, ஐயாவர்களைச் சரியானவேளையில் குன்றத்தின் அடிவாரத்தில்சேர்த்துவிட்டார்கள். இதுவும் தோன்றாத்துணை வேதபுரீசர் கருணையாகும். உதவி செய்த பெருமக்களுக்கு ஆண்டவன் அருளும் ஆசியும் உடன் நிற்கும். வழக்கம்போல் ஸ்ரீ இளவழகனார் உடனிருந்து மகிழ்ச்சியுடன் அன்பருடன் கலந்துகொண்டு படியேறி வந்தனர். மலைமேல் எக்சிகூடி ஆபிஸர் (Excutive Officer) குருக்கள்மார் மற்றைய அன்பர்களும் திரிபுரசுந்தரீ சமேத வேதபுரீஸ்வரர் பிரஸாதத்துடன் ஆண்டவன் ஆசியைத் திருப்புகழ் மணியவர்களுக்குச் செலுத்தி ஆனந்தமுற்றார்கள். பிறகு கூட்டம் கலைந்தது. இதையொட்டியே திருக்கழுக்குன்றத்தில் அனேக பஜனைகளும் சொற்பொழிவுகளும் ஆற்றப்பட்டன.

வருஷா வருஷம் நடந்துவரும் இந்த பக்தி உத்ஸவம் விமரிசையாக நடந்துவர ஆண்டவனை வேண்டுகிறோம். வந்த அன்பர்களுக்கெல்லாம் வள்ளியம்மையார் செய்து வருகின்ற மகேசுவர பூஜை முக்கியமாய்க் குறிப்பிடத் தக்கது. எல்லாம் சிவகருணை. நமசிவாய!

# "ANANDA"

*Sat*, *Chit*, *Ananda* are said to be the three chief attributes of Divinity. All pervading eternal existence, all penetrating universal understanding or knowledge, and the unperturbable eternal joy of being may be said to be the three qualitative expressions of God or Brahmam. Where all is one, the differentiated existences and entities arise in cognition only by the imposition of unrelistic limitations. The *Jivatman* and the *Paramatman* are in essence one. Ananda is the resultant of their intrinsic union. Rather it will be more accurate to say that the perception of Ananda lies in the realisation of the unity of *Jivatman* and *Paramatman*. This realisation is described as *Samarasam* by the Tamil Saints.
*Thayumanavar* declares:

> "சந்ததமும் எனது செயல் நினது செயல்
> நான் எனும் தன்மை நினையின்றி
> இல்லாத் தன்மையால் வேறலேன்
> வேதாந்த சித்தாந்த ஸமரஸ ஸ்வபாவமிதுவே."

As all is one, its realisation will lead to Sama darsanam. The realisation of Ananda is possible only for those who are able to see the Lord every where, within themselves and in the all without. The *Gita* instructs:

"Sarva bhootastam atmanan
Sarva bhootani chatmani
Eekshate yoga yuktatma
Sarvatra Samadarsana."

Even so declares the *Isavasyam.* Hence *Thayumanavar* stated the doctrine of Vedanta Siddhanta was only Samarasam, that is, Samathvam in thought, word and deed. The Siddhars held:

"ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே
உலகனைத்தும் ஒன்றுமே"

The apparent variety of the world is not unreal, but is the ever-changing ornamentations of the ever changeless Sat—the "Jagatyam Jagat" of the Isavasya Upanishad. The world is the Lord's play and whoever joins in it, partakes of the Ananda of Sachithananda - the Lord God. The way to partake is to get one's thoughts inextricably centred in God and by action to sing His glory and magnificence, and no small part of that magnificence is the abundance of grace and its easy approachability.

—*Thiruppugal Mani*

முக்குணம் இல்லதொர் மூலனை நெஞ்சினுள் முற்று நினைக்காமல்
மூவர்வணங்கு முதல்பொருளாகிய மூர்த்தியை நாடாமல்
கைக்குறு நற்கனி யான சொரூபனைக் கண்கொடு காணாமல்
கைகள் குவித்தவன் மெய்ப்புகழ் பாடிக் கண்கணீர் வாராமல்
தக்கவன் செய்திரு லீலைகள் காதுகள் தம்வழி கேளாமல்
தம் அடியார் உறவாய் அவரோடுப சாந்திகள் தேடாமல்
துக்க இருட்டறு சோதி யிலிங்கனைத் தூய்மலர் தூவாமல்
துன்ப நெடுங்கடல் வெம்பிற விப்பிணி தொலைவதும் ஆகாதே!

Regd. M. No. 5390, Amirthavachani (1957 ஆடி—அமிர்தவசனி)

-208-

Coffee
Ours for Quality
RAW, ROAST OR GROUND
GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்
சுவர்ண மாளிகை
A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூலவீதி - மதுரை
Tel:—"FAITH" Estd:—1924. Phone:—113

## அரிய தெய்வ அருள் நூல்கள்

ஸ்ரீ. ரசபதி விரிவுரையுடன்

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி | 1 | 0 | 0 |
| ,, 6 திருவகுப்புகள் | 1 | 8 | 0 |
| ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் | 2 | 0 | 0 |
| ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல் | 1 | 8 | 0 |
| திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள் | 0 | 6 | 0 |
| திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்) | 0 | 12 | 0 |
| கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன் | 1 | 0 | 0 |
| தேவி தாஸர்கள் (அற்புத வரலாறு) (அச்சில்) | | | |
| சிவநேயச் செல்வர்கள் ,, ,, | | | |
| கணபதி பக்தர்கள் ,, ,, | | | |
| முருகனடியார் ,, ,, | | | |

**அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1**

Printed by K. V. Jagannathan at the National Art Press